# ஸ்ரீ லங்கா

அரசாங்க சமாச்சாரப் பகுதியால் வெளியிடப்பட்டது

மலர் 9: இதழ் 12 நொவெம்பர் 1957 விலை சதம் : 15



## அட்டைப்படம்



இயற்கைத்துறைமுகம் எனப்பெயர்பெற்ற திருக்கோணமலை சமயத் துறையிலும் மிகவும் பிரசித்திபெற்று விளங்குகின்றது. இங்கே தான், குளக்கோட்டுமன்னன் கட்டிய கோணேஸ்வராலயம் ஒரு காலத்தில் மலையுச்சியில் கம்பீரமாகக் காட்சியளித்ததென்றும், இக்கோயிலில் இராவணேஸ்வரன் வழிபட்டு வணங்கிவந்தானென வும் தெரியவருகின்றது. வியாபார நோக்கங்கருதி இங்குவந்து நாட்டை ஆக்கிரமித்த போர்த்துக்கீசர் இந்துக் கோயில்களை யெல் லாம் இடித்துத் தரைமட்டமாக்கினர். இவர்களது " கைங்கரியத் தில் " அகப்பட்ட திருக்கோணமலையின் திருவிளக்காகத் திகழ்ந்த கோணேஸ்வராலயமும் தகர்ந்தது. இடித்துத் தள்ளப்பட்ட ஆயிரங்கால் மண்டபத்தின் அழகிய சிற்பத்தூண்களெல்லாம் கடலில் மூழ்கின. அண்மையில் டாக்டர். பாலேந்திரா திருக்கோணமலைக் கோயிலைப் புனருத்தாரணஞ்செய்யும் வேலையில் ஈடுபடு வதற்குமுன் இரு சுழியோடிகளை காமிராக்களுடன் கடலினுள் அனுப்பி கடலினுள் மூழ்கிக்கிடக்கும் மண்டபத்தினதும், கோயிலினதும் சிதைவுகளைப் படம் பிடித்தெடுத்தார். அதன் பின்னர் கோயில், கடலில் இடித்துத்தள்ளப்பட்ட உண்மையை எல்லோரும் ஒப்புக்கொண்டனர். இடிந்த கோயிலின் அத்திவாரமும், இராவணன்வெட்டும் நமது புகைப்படக்காரரின் காமிராவுக்குள் அகப்பட்டிருக்கின்றன.

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | திருக்கோணமலை இலங்கைக்குக் கைமாறியது .. .. .. | 3 |
| 2. | திருக்கோணமலைக் கடற்படைத்தளம் .. .. .. | 5 |
| 3. | உண்மையான சுதந்திரம் பெற்றுவிட்டோம் .. .. .. | 7 |
| 4. | காணநோற்றில கமலக் கண்களே .. .. .. | 9 |
| 5. | மக்கள் ஆட்சியின் சாதனை .. .. .. | 13 |
| 6. | அரசாங்க ஊழியர்களுக்குப் புதிய சலுகைகள் .. .. .. | 15 |
| 7. | மரக்கலை .. .. .. | 16 |
| 8. | மணி திருநாவுக்கரசு முதலியார் .. .. .. | 21 |
| 9. | ஈழத்தில் இயற்றப்பெற்ற நாடகங்கள் .. .. .. | 27 |


1——J. N. B 71378—5,508 (12/57)

# திருக்கோணமலை இலங்கைக்குக் கைமாறியது

### இலங்கைச் சரித்திரத்தில் ஒரு பொன்னேடு.

கடந்த மாதம் 15 ந் திகதியன்று இலங்கையின் புகழ் பெற்ற இயற்கைத் துறைமுகமும் கப்பற்படைத் தளமுமான திருக்கோணமலை மீண்டும் இலங்கை மக்களின் உடமை ஆயிற்று. மற்றொரு பிரிட்டிஷ் தளமான கட்டுநாயக்கா விமான நிலையமும் நவம்பர் 1 ந் திகதி இலங்கையின் கையில் ஒப்படைக்கப்படும்.

திருக்கோணமலைத் துறைமுகம் இலங்கையின் ஆதிக்கத்துக்கு மீண்டும் வந்துற்றமை இலங்கையின் சரித்திரத்திலேயே ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். இதுபற்றிப் பத்திரிகைகள் பலவும் தலையங்கங்கள் தீட்டியுள்ளன.

ஒக்ரோபர் மாதம் 15 ந் திகதியன்று "சிலோன் டெயிலி நியூஸ்" பத்திரிகை பின்வருமாறு எழுதியது :—

**இலங்கைச் சரித்திரத்தில் ஒரு புது ஏடு**

"இலங்கையின் கிழக்குக் கரையிலே இன்று சரித்திரம் உருவாகிறது. பிரிட்டிஷாரின் கைவசமுள்ள திருக்கோணமலைக் கப்பற்றளம் சம்பிரதாய ரீதியில் இலங்கைக்குக் கைமாறுகிறது. இன்று பிரிட்டிஷ் கடற்படையின் வெண் கொடி யிறக்கப்பட்டு அதற்குப் பதிலாக இலங்கை நாவாய்ப் படையின் கொடி ஏற்றப்படும். எமது நாட்டுச் சரித்திரத்தில் இது முக்கியமான நிகழ்ச்சியாகும்.

திருக்கோணமலை உலகின் சிறந்த இயற்கைத் துறைமுகங்களில் ஒன்று. ஒரு கடற் படைத்துறை என்று இத்துறைமுகம் பெயரெடுத்த நாட்தொடக்கம் இது எப்பொழுதும் அந்நியர் கைவசமே இருந்து வந்திருக்கிறது.

நாம் சுதந்திரம் பெற்றுப் பத்து வருடங்களாகின்றன. இருந்த போதிலும் நாம் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் செய்துகொண்ட தற்பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றின் பிரகாரம் திருக்கோணமலை பிரிட்டிஷார் கைவசமே தொடர்ந்து இருந்துவந்தது. இந்நிலை அபத்தமான ஒன்றாகும். திருக்கோணமலை அன்னியர் கைவசமிருத்தல் நாம் பெற்ற சுதந்திரத்தைப் பற்றியே சிலர் சந்தேகிக்கும்படி செய்தது. இவ்விதம் சந்தேகிப்போரை எமது அந்நிய நாட்டுக் கொள்கை சுதந்திரமான ஒன்றென நம்பச் செய்வது முடியாத ஒன்றே. திருக்கோணமலையில் பிரிட்டிஷ் வெண்கொடி பறந்துவரும்வரை இவ்வித அபிப்பிராயங்கள் இயற்கையாகத் தோன்றிக்கொண்டேயிருந்திருக்கும்.

ஆகவே இப்பிரச்சினையை எத்திசையிலிருந்து கவனித்தாலும் திருக்கோணமலையை இலங்கையர் கைக்கு மாற்றுவது ஒரு விவேகமான முடிவென்றே கொள்ளுதல் வேண்டும்."

"வீரகேசரி" பத்திரிகை பின்வருமாறு எழுதியது:—

**பொன்னாள்**

"இன்று இலங்கையின் சரித்திரத்தில் மட்டுமின்றி உலக சரித்திரத்திலேயே பொன்னாளாகும். நாலரை நூற்றுண்டுகளாக மேல்நாட்டவர்களிடம் சிக்கி நம்மையும், ஆசியமக்கள் பலரையும் அடிமைப் படுத்திவந்த திருக்கோணமலைக் கடல்தளம் இன்று இலங்கை மக்களின் கைக்கு கத்தியின்றி இரத்தமின்றி அமைதியாக மாறுகின்றது. ............ .... இன்று விடுதலையடையும் திருக்கோணமலை மீண்டும் புகழ்பெற்ற வர்த்தகத்துறைமுகமாகி எதிர் காலத்தில் பெரிதும் செழித்தோங்கி வளருமென்பதே பலரது நம்பிக்கையுமாகும்."

**சென்னைப் பத்திரிகையின் பாராட்டு**


ஒக்ரோபர் 19 ந் தேதியன்று சென்னையிலிருந்து வெளியாகும் "இந்துப்" பத்திரிகை "பிரிட்டிஷ் தளங்கள் திருப்பிக் கொடுபட்டன" என்ற மகுடமிட்டு எழுதிய தலையங்கத்தில் பின்வருமாறு கூறியிருக்கிறது :—

"திரு.பண்டாரநாயக்கா அவர்கள் பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்ட நாட் தொடக்கம் தமது தேர்தல் உறுதி மொழிகளில் ஒன்றான இதனைத் தாம் நிறைவேற்றத் திடசங்கல்பம் செய்திருப்பதைச் சந்தேகத்துக்கு இடமின்றித் தெளிவாக்கி வந்தார். இரு அரசாங்கங்களும் நல்லெண்ணத்துடன் இவ்வதிகார மாற்றத்தைச் செய்து முடிப்பது அவர்களின் விவேகத்திற்கும் நட்புணர்ச்சிக்கும் சான்று பகர்கிறது. இவ்வதிகார மாற்றத்தை யொட்டித் திருகோணமலையில் நடைபெற்ற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வைபவம் இலங்கையின் சுதந்திரத்தை மேலும் உறுதிப்படுத்துகிறதென்றும், ஐக்கிய ராச்சியத்துடன் இலங்கை கொண்டிருக்கும் நட்பை மேலும் பலப்படுத்துகிறதென்றும், சாம்ராஜ்யத்திலுள்ள பல நாடுகளும் தம்மிடையே ஏற்படும் பிரச்சினைகளைச் சமரசமாகத் தீர்த்துக்கொள்ளமுடியும் என்பதற்குச் சான்று பகர்கிறதெனவும் குறிப்பிட்டிருப்பது சரியானதே."

"தினமின" சிங்களப் பத்திரிகை எழுதுவதாவது :—

**இலங்கைத் தளங்கள் இலங்கைக்கே**

"இன்று நடைபெறும் நிகழ்ச்சி இலங்கையின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் ஒன்றுமட்டுமல்ல, எமது அரசாங்கத்தின் நடுநிலைமைக் கொள்கை



**திருக்கோணமலைக் கடற்படைத்தளத்தை பிரிட்டிஷார் இலங்கையருக்குக் கையளித்த விழாவின்போது, பிரித்தானியக்கொடி இறக்கப்பட்டு, சகலமரியாதைகளுடனும் இலங்கைக்கொடி ஏற்றப்படும் காட்சி.**

யையும் ஊர்ஜிதப்படுத்துகிறது. திருக்கோணமலைத் துறைமுகத்தின் கைமாற்றம் இக்கொள்கையை மேலும் பலங்கொண்டதாகச் செய்கிறது. திருக்கோணமலைத் துறையையும், கட்டுநாயக்கா விமானத் தளத்தையும் பிரிட்டிஷார் ஆண்டனுபவித்துவரும் வரையில் இலங்கை உண்மையில் சுதந்திரமான ஒரு தேசம், நடுநிலைமையான ஒரு தேசம் என்று சொல்லப்படமாட்டாது. இலங்கையில் பிரிட்டிஷ் கடல், விமானத்தளங்கள் தொடர்ந்து இருந்து வரும்வரை இலங்கையின் பக்கச் சார்பற்ற அன்னிய நாட்டுக் கொள்கைக்கு நிரந்தரமான ஆபத்து இருந்து வரவே செய்திருக்கும்."

15 ந் திகதி "ஜனதா" பத்திரிகை கூறுவதாவது :—

"மறுமலர்ச்சி யடைந்துவரும் ஆசியாவிலுள்ள தேசங்கள் ஒவ்வொன்றும்—அவை சுதந்திரம் பெற்றவையாயினும் பெறாதவையாயினும்—இலங்கையில் இன்று நடக்கும் நிகழ்ச்சி கண்டு பெரும் பூரிப்படைவார்கள். உலகின் இப்பகுதியிலிருந்து அந்நிய ஏகாதிபத்தியத்தின் விட்டகுறை தொட்டகுறை நீங்குவதைக் கண்டு ஆசியா முழுவதும் ஆனந்தப்படுவது உண்மையேயாயினும் திருகோணமலையை தன்னகத்தே கொண்ட இலங்கையில் வசிக்கும் தேசீய இதயம் படைத்த ஒவ்வொரு பிரஜையும் இந்நிகழ்ச்சியால் விசேஷித்த இன்பமடைவான்."

ஒக்ரோபர் 15 ந் தேதி "சிலோன் ஒப்சேபர்" பத்திரிகை பின்வருமாறு தன் தலையங்கத்தில் எழுதியது :—

"இலங்கையில் இருந்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கடைசிக் கோட்டையை இங்கிருந்து நீக்கிய விசேஷ பெருமை திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவுக்கே யுரியதாகும்"

# திருக்கோணமலைக் கடற்படைத்தளம்

திருக்கோணமலைத் துறைமுகம், வங்காள விரிகுடாவை எதிர்நோக்கியும் இந்தியாவின் கிழக்குக் கரையோரத்துக்கு நேராகவும் இருக்கின்றது. இத் துறைமுகத்தின் வடிவ அமைப்பு சீராகவில்லாதிருப்பதோடு அதன் முகப்பில் உள்ள ஏராளமான சிறு சிறு வளைவுகள் ஒரு மனோரம்மியமான காட்சியாகும். இதனுற்றான் உலகிலுள்ள மிகவும் அழகு வாய்ந்த மிகப் பெரிய இயற்கைத் துறைமுகங்களில் திருக்கோணமலையும் ஒன்றாகப் புகழப்படுகிறது.

ஏகாதிபத்தியத்தை உருவாக்கிக் கிழக்கத்திய நாடுகளின் செழிப்பான வர்த்தகத்தின் ஏகபோக உரிமையைக் கைப்பற்றப் பாய்க்கப்பலகள் கடல்களில் அங்குமிங்குமாக விரைந்து சென்று கொண்டிருந்த அந்தக் காலத்தில் திருக்கோணமலை உண்மையில் ஒரு வர்த்தகத் துறைமுகமாகவே யிருந்தது.

மேல் நாட்டினர் திருக்கோணமலையைக் கண்டு பிடித்து சுமார் ஒரு நூற்றாண்டு காலம் சென்றும் கூட அப்பிரதேசம் தன் பழைமையான அமைதி குலையாது நிம்மதியாக உறங்கிக் கொண்டிருக்கும் ஓர் இடமாகவே இருந்தது என்று ஆர். எல். புரோகியர் சுட்டிக்காட்டுகிறார். இலங்கையில் மேற்குக் கரை, தெற்குக் கரைத் துறைமுகங்களிலிருந்து கறுவா, மிளகு, கஸ்தூரி யானை, தந்தம், முத்து என்பனவற்றைப் போர்த்துக்கீசர் தமது பிரமாண்டமான பீரங்கிகளின் நிழலிலே கப்பல் கப்பலாக ஏற்றிக் கொண்டிருந்த காலத்தில்கூட திருக்கோணமலைத் துறையின் நீர்ப்பரப்பு சலனமின்றித் துயின்று கொண்டேயிருந்தது.

புரோகியர் மேலும் கூறுகிறார்: போர்த்துக்கீசரின் கொடிகளின் நிழலில், போர்த்துக்கீச மன்னரின் ஏகபோக வர்த்தக உரிமைகளான இப்பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுக்கொண்டிருக்கையில் ஒல்லாந்தர் தமது சுயஆட்சியை நிலைநாட்ட வர்த்தக நாவாய்களையும், போர் நாவாய்களையும் மிகவும் வியப்பூட்டும் வகையில் வேகமாகத் தயாரிக்க ஆரம்பித்தனர். கிழக்குத் திசையில் ஒல்லாந்தர் ஆதிக்கம் அதிகரித்தமையால் கீழ்த்திசையின் மணமகள் என்று வர்ணிக்கத்தக்க இலங்கை வர்த்தகத்தைத் தமதாக்கிக்கொள்ளும் போட்டி இங்கு வலுப் பெற்றது.

இந்தப் போட்டா போட்டியின் காரணமாக திருக்கோணமலையைப் பல நூற்றாண்டுகளாகச் சுற்றிக் கிடந்த அமைதி என்னும் மெல்லிய திரை கிழிந்து போயிற்று. ஆகவே போர்த்துக்கீசர் மிகத் தீவிரமான வேகத்துடன் இலங்கையின் கரை ஓரத்திலிருந்த தமது முக்கியமான இடங்களையெல்லாம் பலப்படுத்திக் கோட்டை கொத்தளங்களை அமைத்தனர். ஆயிரக்கால் கோவிலை இடித்தனர். அதன் அழகொழுகும் சிற்பங்களையும் தூண்களையும் திருக்கோணமலைக் கோட்டையை அமைக்க உபயோகித்தனர்.

அன்று தொடக்கம் திருக்கோணமலை ரண பூமியாயிற்று. ஆட்சி வெறியும் பேராசையும் ஓயாது முட்டி மோதும் யுத்தக்களமாயிற்று. அது முதல் திருக்கோணமலை ஒரு முக்கியமான நாவாய்த்தளமாக விளங்கி வந்தது. சீனரும், இந்தியரும், அராபிக்கரை யோரத்தினரும் இங்கு படையெடுத்து வந்திறங்கியிருக்கிறார்கள். போர்த்துக்கீசரும், ஒல்லாந்தரும், பிரிட்டிஷாரும் படையெடுத்து வந்திருக்கிறார்கள். பிரெஞ்சுக் கொடி கூட ஒரு வருட காலத்துக்குச் சற்றுக் குறைவாக இத் திருக்கோணமலைத் துறைமீது பறந்து கொண்டிருக்கிறது.

முதலாவது ஐரோப்பியர்கள் இத்திருக்கோணமலைக்கு ஆயத்தஞ் செய்துவரவில்லை; அகஸ்மாத்தாக வந்தார்கள் என்பது இங்கு கருதத்தக்கது. போர்த்துக்கீசனான லொறன்சோ த அல்மேதாவும் அவனுடைய மூன்று கப்பல்களும் மாலைதீவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கையில் கப்பல்கள் ஒரு நீர்ச்சுழியில் சிக்கித் திசைமாறி இலங்கை வந்தடைந்தன. அதன்பின் 1601 ம் ஆண்டு ஜோரிஸ் வான் ஸ்பீல்பேர்க் என்னும் டச்சுக்காரன் ஒல்லாந்திலிருந்து இலங்கையோடு வர்த்தகத் தொடர்பேற்படுத்த இங்கு வந்தான். பதினோராண்டு கழிந்த பின் மார்சலஸ் டி பொஸ்கூடர் கண்டிக்கு வந்து கண்டியரசனோடு ஒரு ஒப்பந்தமும் எழுதிக் கொண்டான். இதன் பிரகாரம் டச்சுக்காரர் திருக்கோணமலையிலிருக்கும் கொட்டியாரம் என்னும் இடத்தில் ஒரு கோட்டை அமைக்க அனுமதிக்கப்பட்டனர். இதை அவர்கள் கட்டிமுடித்த உடனேயே போர்த்துக்கீசர் அதனைத் தவிடுபொடியாக்கிவிட்டனர்.

1782 ம் ஆண்டு ஜனவரி மாதம் கடற்படைத் தலைவர் எட்வர்ட் ஹியூஸ் அவர்கள் தலைமையில் ஒரு பிரித்தானிய கடற்படையும், சேர். ஹெக்டர்

மன்ருே தலைமையில் ஒரு படையும், கிழக்குத் திசையிலே, ஐரோப்பியர்கள் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்த மும்முரமாகப் போட்டியிட்டு வந்த திருக் கோணமலைக்கு அனுப்பப்பட்டன. இறுதியில், 1795 ம் ஆண்டு பிரிட்டிஷார் திருக்கோணமலையைக் கைப்பற்றினர். 1801 ம் ஆண்டு இலங்கை சம்பிர தாயமாக பிரித்தானியாவுடன் இணைத்துக்கொள் ளப்பட்டது. இந்தியாவைத் தன் ஆதிக்கத்துக்குள் வைத்திருக்கவும், முழு ஆசியாவையும் ஆட்டிவைக்க வும் கூடியதென அறிஞர்கள் கூறிய கேந்திரத் தானத்தை இவ்விதமாகப் பிரித்தானியா தனது ஆட்சிக்குள் கொண்டுவந்தது. 1803 ம் ஆண்டிலே, திருக்கோணமலை பலமிக்க பாதுகாப்புத் தளமாகத் திகழ்ந்தது.

அக்காலந்தொட்டு, கீழ்த்திசையில் தனது கடற் படைகளை இயக்கும் பிரதான கடற்படைத்தளமாகத் திருக்கோணமலை பிரித்தானியாவால் உபயோகிக்கப் பட்டு வந்தது. இலங்கை அரசாங்கமும், ஐக்கிய இராச்சியமும், தங்களின் பரஸ்பர நன்மைகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்ய உடன்பட்டிருக்கின் றனவென 1947 ம் ஆண்டு பாதுகாப்புப் ஒப்பந்தம் குறிப்பிடுகின்றது. எனினும் திருக்கோணமலைக் கடற்படைத் தளத்தையும், கட்டுநாயக்க ஆகாயப் படைத் தளத்தையும் அளிப்பதுதான் இவ்வசதி களாகுமென்று குறிப்பிடப்படவில்லை. யுத்தகாலத் தில் பிரிட்டிஷார் திருக்கோணமலையையும், கட்டு நாயக்காவையும் உபயோகித்தனர். யுத்தத்திற்குப் பின், 1947 ம் ஆண்டு ஒப்பந்தத்தின்கீழ் நடப்ப தாகக் கூறிக்கொண்டு இவ்விரு தளங்களையும் பிரிட் டிஷார் தொடர்ந்து உபயோகித்து வர அனுமதிக்கப் பட்டனர். ஆனல் பிரித்தானிய அரசாங்கம் திருக் கோணமலையும், கட்டுநாயக்காவும், கடற்படை, ஆகா யப்படைத் தளங்களாக உபயோகிக்கப்பட விடப்பட் டிருப்பதாகவே கருதிவந்தது. தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்குவந்ததும், எந்த வல்லரசோடும் இணைந்துகொள்ளாத கொள்கையை அது கடைப் பிடித்ததனல் இந்த நிலைமையைத் தெளிவுபடுத்த வேண்டியதாயிற்று. பிரதமர் ஐக்கிய ராச்சியத்திற்கு முன்னொருபோது விஜயஞ் செய்தபொழுது இது சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துவைத் தார். அது சம்பந்தமான கடிதப்போக்குவரத்துகள் தொடர்ந்து நடத்தப்பட்டன. கடைசியில் மூன்று வருடகாலத்துக்குள் பிரித்தானிய தளங்களை அகற் றுவதென முடிவாக்கப்பட்டது.

திருக்கோணமலை இவ்விதமாகப் பலநூற்றுண்டு களுக்குப் பிறகு மீண்டும் அமைதிகொள்ளும்.

# புகையிரத சேவைக்கு அமெரிக்க உதவி

**73,30,000 ரூபா உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது**

மேற்கொண்டும் பத்து டீசல் வண்டிகளை வாங்கு வதற்கு 73,30,000 ரூபாவை வழங்க ஐக்கிய அமெ ரிக்கா சம்மதித்ததோடு, கொழும்புப் பிரதேசத்தின் சுற்றுப்புற புகையிரத சேவையை விஸ்தரித்து அபி விருத்திசெய்வதற்கான அரசாங்கத்தின் திட்டம்கடந்த வாரத்தில் இன்னும் ஒருபடி முன்னேறியிருக்கிறது.

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் சேவைசெய்யும் புகையிரத வசதிகளை வெகுவாக அதிகரிக்கவும் பிரயாணிகளின் நிலைமைகளைச் சீர் படுத்தவும் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒரு பெரிய திட்டத்தில் இது ஒரு பகுதியாகும். சுற்றுப்புற புகையிரத சேவைகளின் வேகத்தை அதி கரிக்கவும், மேலதிக வண்டிகளை ஓடவிடுவதன்மூலம் பிரயாணங்களின் எண்ணிக்கையை அதிகரித்துக்கொ ள்ளவும், தற்சமயம் ஏற்றிச்செல்லப்படும் பிரயாணி களின் எண்ணிக்கையை விட கிட்டத்தட்ட இரண்டரை மடங்கு அதிகமான பிரயாணிகளை ஏற்றிச் செல்லவும் இவ்வபிவிருத்தி வேலைகள் வசதியளிக்கும்.

ஒவ்வொன்றும் 750 குதிரை வேகமுள்ள 45 டீசல் வண்டிகளை வெளி நாடுகளிலிருந்து வாங்கு வதும் இரத்மலானையிலுள்ள புகையிரதத் தொழிற் சாலையில் விசேஷ இழுவை வண்டிகளை உற்பத்தி செய்வதும், தானே இயங்கும் வர்ண விளக்கு சமிக் ஞை முறை யொன்றை ஏற்படுத்துவதுமே இம்முழுத் திட்டத்தினதும் நோக்கமாகும்.

இவ்வண்டிகளுள் முதல் 15 டீசல் வண்டிகளும் அரசாங்க நிதிகளைக்கொண்டு வாங்கப் படுகின்றன. இவை இப்பொழுது சுவிட்ஜர்லாந்தில் செய்யப்பட்டு வருகின்றன. இவை அடுத்த வருடம் இலங்கை வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த வாரம் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் மூலம் மொத் தம் 25 டீசல் வண்டிகளை வாங்குவதற்கான நிதிகளை ஐக்கிய அமெரிக்கா வழங்கியிருக்கிறது. இவ்வண்டி கள் 1959 ம் ஆண்டு இலங்கை வந்து சேர வேண்டும். இம்முழுத் திட்டத்திலுமுள்ள டீசல் வண்டிகளுள் 5 டீசல் வண்டிகளுக்கு மட்டுமே பண வசதி செய்யப்படாதிருக்கிறது.

போக்குவரத்து, கட்டுவேலை மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா, பதில் நிதி மந்திரி செனட்டர் வி. விஜேசிங்ஹ, இலங்கையிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் திரு. மாக்ஸ்வெல் எச். கிளக் ஆகியோர் முன்னிலையில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

# உண்மையான சுதந்திரம் பெற்றுவிட்டோம்

## கடற்தளம் நம் வசமாயிற்று

1948 ம் ஆண்டு இலங்கை தன் அரசியல் சுதந்திரத்தைப் பெற்றது. தற்கால இலங்கையின் சரித்திரத்தில் அது ஒரு முக்கிய நிகழ்ச்சி. அந்நிகழ்ச்சிக்கு அடுத்தபடி நமது சரித்திரத்தின் மிக முக்கிய நிகழ்ச்சி சென்ற மாதம் திருகோணமலைத் துறைமுகம் இலங்கைக்கு மீண்டும் அளிக்கப்பட்டமையாகும். இதை ஒரு வகையில் நமது சுதந்திரப் போரின் முற்றுப்புள்ளி யெனவும் கூறலாம். சர்வதேச விவகாரங்களில் எவ்வித அச்சமுமின்றி வல்லரசுப் போட்டியில் எப்பக்கமும் சாராத நமது நடுநிலைமைக் கொள்கையை அனுட்டித்துச் செல்வதற்கு எவ்வித தடையும் நமக்கு இனிக் கிடையாது என்பதை அது உலகிற்கும் பறையறைகிறது.

1948 ம் ஆண்டு பெப்ருவரியில் நாம் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளுடன் சம அந்தஸ்துப் பெற்றோம். இருப்பினும் திருக்கோணமலை கட்டுநாயக்கா ஆகிய இடங்களில் பிரிட்டிஷ் படை பலம் தொடர்ந்து இருந்து வந்தமை நமது சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதாகவே இருந்தது. திரு. டி. எஸ். சேனநாயக்காவும் அவர் பின்வந்த இலங்கைப் பிரதமர்களும் பிரிட்டனுக்கு இலங்கையில் எவ்வித தளங்களும் கிடையாதெனவும், இலங்கையின் அனுமதியையும் விருப்பத்தையும் பொறுத்தே பிரிட்டிஷ் அரசாங்கப் படைகள் இலங்கையில் இருக்கமுடியும் எனவும் கூறிவந்தனர். ஆனால் பிரிட்டிஷ் அரசாங்கம் வேறு கதை சொல்லியது. திருக்கோணமலையையும் கட்டுநாயக்காவையும் பற்றி எழுத்தில் எவ்வித ஏற்பாடும் இல்லாத விடத்தும், அவ்விரு தளங்களும் உண்மையில் தமதே என்றும், அவற்றின் ஆட்சியுரிமை தமக்கேயுள்ளதெனவும் உறுதியாகக் கூறிவந்தனர். ஆனால் இத்தளங்கள் இருந்தமையால் நமது சுதந்திரம் எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை என்று ஒரு சிலர் கூறக்கூடும். ஆனால் உண்மையென்னவெனில் நாம் பிரிட்டனை அனுபவிக்கவிட்டது இத்தளங்களை மட்டுமல்ல; இத்தளங்களை நடாத்தற்கு வேண்டிய வேறுபல சேவைகளையும் நாம் அவர்களுக்கு இலங்கையில் அனுமதித்து வந்தோம். இவ்வாறு பலவகைகளில் நமது சுதந்திரம் பறிபோய்க் கொண்டிருந்தது உண்மையேயாகும்.

மக்களாட்சி மலர்வதற்கு முன்னிருந்த அரசாங்கமும் நம் நாடு சர்வதேச அரங்கில் நடுநிலைமை வகித்து வந்ததாகவே கூறிவந்தது. அதனால்தான் தென்கிழக்காசிய ஒப்பந்த ஸ்தாபனத்தில் சேர்வதற்கு அது மறுத்தது. அத்துடன் பாண்டுங் மகா நாட்டின் பத்து இலட்சியங்களையும் தனதாக ஏற்றது. இவ்வித மிருந்தும் அவர்கள் திருக்கோணமலை, கட்டுநாயக்கா தளங்கள் பற்றிச் செயலாற்ருதிருந்தமை விளங்கிக் கொள்ள முடியாத ஒரு புதிராகும். பிரிட்டிஷ் தளங்கள் இலங்கையில் இருக்கையில் மேற்றிசை வல்லரசுக் கோஷ்டியில் நாம் சேரவில்லை என்று எவ்வாறு கூறமுடியும்? பாண்டுங் மகா நாட்டின் சமாதான சகஜீவனம் என்னும் கொள்கையை ஏற்று, எல்லா நாடுகளுடனும் நட்புறவுடனும், எந்தவல்லரசுப் போரணியிலும் சேராமலும் நடுநிலைமையாக நடப்பதே இன்றைய மக்களாட்சியின் மகத்தான பிரகடனம் செய்யப்பட்ட கொள்கை.

இந்தக் கொள்கையைப் பின்பற்றுவதில் கௌரவ பிரதம மந்திரியவர்கள் அநேக நாடுகளுடன் சிநேகத் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளார். இவை ஏற்கனவே நல்ல பலன்களை அளித்துள்ளன. தேயிலை சம்பந்தமாக எகிப்துடனும் யப்பானுடனும் செய்யப்பட்டுள்ள மும்முனை ஒப்பந்தம், அண்மையில் நிறைவேற்றப்பட்ட சீன வர்த்தக உடன்படிக்கை என்பனவும், "இரும்புத்திரை" நாடுகள் உட்பட அநேக நாடுகளுடன் செய்து முடிக்கப்பட்டுள்ள இதர உடன்படிக்கைகளும், இந்நாடுகள் யாவற்றிலுமிருந்து பெறப்பட்ட உதவிகளும் உதாரணமாக எடுத்துக் காட்டத் தக்கனவாகும்.

திருக்கோணமலையிலும், கட்டுநாயக்காவிலுமுள்ள தளங்களின் விஷயத்திலும் தற்போதைய அரசாங்கம் இதே கொள்கையையே பின்பற்றியுள்ளது. சிநேகபூர்வமாகச் செய்துமுடிக்கப்பட்ட ஒரு ஒப்பந்தத்தின் கீழ் இத்தளங்கள் இலங்கைக்குக் கையளிக்கப்பட்டுள்ளன. ஒரு சில கட்டுமட்டான வசதிகள் ஐக்கிய இராச்சியத்துக்குக் கொடுக்கப்பட்டுள்ளனவெனினும் அவைகூட ஐந்து வருட காலத்துக்கு மேல் நீடிக்கமாட்டா. இந்த இரண்டு தளங்களிலுமுள்ள சகல கட்டடங்களுக்காகவும், இதர பொருட்

களுக்காகவும் ஒரு குறிக்கப்பட்ட தொகை ஐக்கிய இராச்சிய அரசாங்கத்துக்குக் கொடுக்கப்படும். இப் பணம்கூட ஐந்து வருடங்களில் பகுதி பகுதியாகவே செலுத்தப்படும். இந்தக் கட்டடங்கள், பொருட்கள் என்பவற்றின் பெறுமதி ஏறக்குறைய பத்துக்கோடி ரூபாவென மதிப்பிடப்பட்டிருப்பினும், ஈற்றில் இரண்டு கோடி இருபது லட்சம் ரூபாவையே ஐக்கிய இராச்சிய அரசாங்கத்துக்குக் கொடுப்பதென ஒழுங்காகியிருக்கிறது. இது இலங்கைக்கு மிகவும் சாதகமான ஒரு நடவடிக்கையாகும். அடுத்த ஐந்து வருட காலத்துள் ஐக்கிய இராச்சியத்துக்கு இந்த வசதிகளை மறுக்க வேண்டிய சந்தர்ப்பம் இலங்கைக்கு ஏற்படுமிடத்து அங்ஙனம் மறுக்கும் அதிகாரமும் எங்களுக்கு உண்டு.

இத்தளங்களைக் கையேற்றதன் விளைவாக எமது சுதந்திரம் பூரணமடைகிறது. எமது விருப்பத்துக்கு மாறாக ஐக்கிய இராச்சியம் ஈடுபடக்கூடிய யுத்தங்களில் நாமும் இழுபடக்கூடிய அபாயம் அறவேயின்றி எமது சொந்த வெளிநாட்டுக் கொள்கையை நாம் இப்போது தொடர்ந்து பின்பற்றலாம். பிரித்தானியருக்குரிய தளங்கள் இங்கிருந்தால் நாம் எமது விருப்பத்துக்குமாறாக அவர்கள் ஈடுபடும் யுத்தங்களில் ஈடுபட நேரிட்டிருக்கும். திருக்கோணமலையை இப்போது நாம் எமது சொந்தக் கடற்படைத் தளமாக உபயோகிப்பதுடன் பொருளாதாரம் சம்பந்தப்பட்ட மட்டில் அதனை கொழும்பைப் போன்று ஓர் முக்கியமான பொருளாதாரத் துறைமுகமாகவும் அபிவிருத்தி செய்து நம் நாட்டின் சுபீட்சத்துக்கு மேலும் உதவக் கூடியதாயிருக்கிறது. இரத்மலானை விமான நிலையம் உபயோகிக்கப்படுவதைப்போன்று கட்டுநாயக்காவும் இலங்கை விமானப் படையால் மாத்திரமன்றி சாதாரண விமானங்களாலும் உபயோகப்படுத்தப்படலாம்.

திருக்கோணமலையிலும் கட்டுநாயக்காவிலுமுள்ள தொழிலாளர்களுக்கு அரசாங்கப் பகுதிகளில் தகுந்த தொழில் கொடுக்கவும் அவர்களைக் குடியேற்றக் காணிகளில் குடியேற்றவும் அரசாங்கம் திட்டம் வகுத்துள்ளது. இவர்களில் நியாயமான தொகையினர் திருக்கோணமலையிலும் கட்டுநாயக்காவிலும் தொடர்ந்து வேலைசெய்து வருவர்.

## நெற்காணி மசோதா விற்பனை

நெற் காணிகள் பற்றிய நகல் மசோதாவின் பிரதிகளை விவசாயிகளும் பொது மக்களும் பெற்றுக் கொள்ளக் கூடியதற்கான நடவடிக்கைகளை விவசாய உணவு மந்திரி திரு. பிலிப் குணவர்த்தன அவர்கள் எடுத்துக்கொண்டுள்ளார்.

உத்தேசிக்கப்பட்டுள்ள சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமுன் அதன் விபரங்களைத் தெரிந்து கொள்ளும் சந்தர்ப்பம் மக்கள் அனைவருக்கும் வழங்கப்படவேண்டுமென்று உணவு மந்திரி அவர்கள் பிரதமரிடம் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

நெற் காணிகள் பற்றிய நகல் மசோதா அரசாங்க மொழியிலும் ஆங்கிலத்திலும் அச்சிடப்பெற்று இப்பொழுது கொழும்பு, செக்கிறட்டேறியற் கட்டிடத்திலுள்ள அரசாங்கப் பிரசுர நிலையத்திலும் களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, கண்டி, நூரளை, மாத்தளை, வவுனியா, குருநாக்கல், புத்தளம், அனுராதபுரம், பொலன்னறுவை, இரத்தினபுரி, கேகாலை, வதுளை ஆகிய இடங்களிலுள்ள கச்சேரிகளிலும் விற்பனைக்கிருக்கிறது. இந்த நகல் மசோதாப் பிரதிகளை இவ்விரண்டுள் எம் மொழியில் வேண்டுமானாலும் 80 சதத்துக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

தமிழ் விவசாயிகளும் இம்மசோதாவின் சரத்துக்களை நன்கறிந்துகொள்ள வசதியளிக்கும் பொருட்டு அது தமிழிலும் தயாரிக்கப்படவேண்டுமென உணவு மந்திரி கட்டளை பிறப்பித்திருக்கிறார்.

எல்லாக் கிராமப் பகுதிகளிலும் விவசாயிகளின் தாபனங்களால் ஏற்பாடுசெய்யப்படும் கூட்டங்களில் இம்மசோதாவும் இதனால் ஏற்படும் அனுகூலங்களும் இப்பொழுது விவாதிக்கப்படுகின்றன.

நெற்காணிகளைப் பயிர் செய்யும் வாரக் குடிகளின் வாரக் குடியுரிமையைப் பாது காத்தல், நிலச் சொந்தக்காரருக்கு வாரக் குடிகள் செலுத்த வேண்டிய குடிவாரத்தை வரையறுத்தல் ஆதியனவே நெற்காணிகள் மசோதாவின் பிரதான நோக்கங்களாகும். விவசாயத் தொழிலாளரின் சம்பளத்தை நிர்ணயிப்பதற்கும், நெற்காணிகளில் உத்தேசிக்கப்பட்டுள்ள சட்டத்தைப் பொதுவாக அமுல் நடாத்தவும் விவசாயச் சபைகளை ஸ்தாபித்துக் கொள்ளுதற்கும் இம்மசோதா வழிவகுக்கின்றது. சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் பெற்ற வாலிபர்கள் பயிற்சியளிக்கப்பட்டபின் இச்சபைகளின் காரியதரிசிகளாக நியமனஞ் செய்யப்படுவார்கள்.

# "காண நோற்றில கமலக் கண்களே"

(வ. இ. ராசரத்தினம் எழுதியது; ஒலிபரப்பப் பெற்றது)

**இரசிகன் : (பாடுகிறுன்)**

பேண நோற்றது மனை பிறவி பெண்மை போல்
நாண நோற்றுயர்ந்தது நங்கை தோன்றலால்
மாண நோற்றீண்டிவள் இருந்த வாறெல்லாம்
காண நோற்றில அவன் கமலக்கண்களே.

(திரும்பவும் பேணநோற்றது . . . )

என்ன . . .? காண நோற்றில அவன் கமலக் கண்களே! நன்ருயிருக்கிறதே கம்பன் சொல்வது . . .? பாவம்; அரக்கியரிடையே அழுது புலம்பிக் கொண்டு உச்சிக் காலத்துச் சந்திரன் போலச் சீதாதேவி ஒளியிழந்து கிடக்கும் அந்த இரங்கத் தக்க நிலையை இராமனின் கண்கள் காணக்கொடுத்து வைக்கவில்லையாமே. ஐயோ! சீதாதேவியின் சோகத்தை இராமன் காண வேண்டுமே என்று கம்பன் சொல்கிருனே. ஆமாம் (பாடுகிறுன்) காணநோற்றில அவன் கமலக்கண்களே . . . ஐயோ! கம்பனுக்கு ஏன் இப்படிக் குரூர புத்தி தோன்ற வேண்டும்?

**கம்பன் :** என்னப்பா! இராமாயணமா படிக்கிருய்! படி படி. அதுவும் சிறையிருந்த செல்வியை அநுமன் அசோகவனத்திற் கண்ட அந்தப் பகுதி என் காவியத்திலேயே ஒரு அருமையான கட்டம்.

**இரசி :** என்ன? உன் காவியமா . . .? யாரப்பா நீ பேசுவது . . .?

**கம்பன் :** நான் யாரா, . .? நன்ருயிருக்கிறதே கேள்வி! வையத்திற் தமிழ் இருக்குமட்டும் என்னை யார் என்று கேட்க எந்தத் தமிழனுமே துணியமாட்டான். (சிரித்துக் கொண்டே) நீ கேட்கிருய் என்னை யாரென்று. உண்மையாகவே நான் யாரென்று உனக்குத் தெரியவில்லையா . . .?

**இரசி :** ஒ! அநுமனு! வாருங்கள் வாருங்கள் இராம தூதரே. தமது கூற்ருகவுள்ள கவிதையைத் தான் படித்துக் கொண்டிருக்கிறேன் . . . வாருங்கள்.

**கம்பன் :** என்னது . . .? அநுமனு? நன்ருயிருக்கிறது ரசிகரே! மனிதனின் இலட்சிய வடிவமான இராமன், கற்புக்கனலின் பிரதி நிதியான சீதை, தியாகத்தின் சின்னமான இலட்சுமணன், இப்படியான எல்லோருமே என் மனக்குகையிற் தீட்டிய ஓவியங்கள் தாம். அநுமனும் அவர்களைப் போன்ற ஒரு ஓவியமே. ஓவிய கர்த்தாவையே ஓவியம் என்று . . .

**இரசி :** மன்னிக்க வேண்டும் மகாகவி! மன்னிக்க வேண்டும். தங்கள் ஒப்பற்ற காவியத்திலே சீதையைக் கண்ட அநுமன் எண்ணிய எண்ணங்களைப் படித்துக் கொண்டிருந்தேன். அநுமனுடைய சிந்தனையோடு ஒன்றி, அவனைச் சிந்திக்கவைத்த தங்களையே மறந்து போய்விட்டேன் . . .அந்தக் குற்றத்திற்காக மறுமுறையும் . . . . .

**கம்பன் :** மன்னிப்புக் கேட்க வேண்டாம் ரசிகரே! உங்களைப் போன்ற ஒரு ரசிகர் சீதாதேவியோடு சோகித்து, இராமனேடு தர்மம் காத்து கும்பகர்ணனேடு வீரம் பேசி மகிழ்வதிற்தானே என் காவியத்தின் வெற்றி தங்கி இருக்கிறது. உண்மையாக என் இராமகாதை அரங்கேற்றப்பட்ட அந்த நாளை விடப் பரமரசிகராகிய நீவிர் இந்தக் காதையைப் படித்து இன்பத்திற் திளைப்பதைக் காணும் இந்தக் கணத்தில் தான் நான் பெருமகிழ்வு கொள்கிறேன் அது சரி. எங்கே அந்த வரி . . . அதைப்படியுங்கள் பார்க்கலாம்.

**இரசி :** எந்த வரி . . . கவிஞரே . ..

**கம்பன் :** அந்த வரி தான். உமக்குச் சந்தேகத்தைக் கிளப்பிய அந்த வரிதான். "காணநோற்றில அவன் கமலக் கண்களே" என்ற அதே வரி தான்.

**இரசி :** ஆம் கவிஞரே! அசோக வனத்திலே அரக்கியரிடையே சிறைப்பட்டிருந்த சீதையின் கோபத்தைப் பிரமாதமாக வர்ணித்த தாங்கள், அந்தத் தேவியின் துன்பக் கோலத்தைக் காண இராமன் கண்கட்குக் கொடுத்து வைத்திருக்கவில்லையே என்றுஇந்த வரியிற் பாடியிருக்கிறீர்களே. இந்தக் கோலத்தை இராமன் காணத்தான் வேண்டுமா? மனைவியை இழந்த சோகத்திற் துடித்துக்கொண்டிருக்கும் அவன் சீதையின் துன்பத்தை நேரிற் கண்டு இன்னமும் துயரப்பட வேண்டும் என்பது தங்கள் விருப்பமா . . .? எனக்கு என்னவோ சீதையின் துன்பத்தை இராமன் காண வேண்டாம் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது கவிஞரே!

**கம்பன் :** அப்படியா ! இராமன் மேலுள்ள இரக்கத்தினுல் தன் மனைவியின் சோகத்தைக் காணின் அவன் சகியான் என்ற எண்ணத்தினுல் நீங்கள் இப்படிச் சொல்கிறீர்கள். ஆனுல் ஒன்று மட்டும் நான் கேட்கிறேன். பதில் சொல்வீர்களா . . ?

**இரசி :** நானு தங்கட்குப் பதில் சொல்வது ? --

**கம்பன் :** என், சொல்லக் கூடாதா ? நீரும் என்னைப் போல மனிதன் தானே ! உமக்கும் மனம் என்ற ஒன்று இருக்கிறது. ஆகவே தாராளமாகச் சொல்லலாம். " காதலியின் பிரிவுத்துயர்க்கோலத்தைப் பார்ப்பதில் மகிழ்ச்சி உண்டாகாதா " ?

**இரசி :** பிரிவுத்துயரைக் காண்பதில் ஒரு மகிழ்ச்சியா ? கவிஞரே ! தன் அன்புக்கினியவளின் துயரைக் காண்பதில் ஒருவனுக்கு மகிழ்ச்சி எப்படி ஏற்படக் கூடும் ? சாதாரண மனிதனுக்கே மற்றவரின் துயரைக் காண்பதில் இன்பம் ஏற்படுவதில்லையே. அப்படியிருக்க இலட்சிய புருஷனுகிய இராமனுக்கு சீதையின் துயரைக் காண்பதில் மகிழ்ச்சியா . . ? என்னுல் நம்ப முடியவில்லைக் கவிஞரே !

**கம்பன் :** சரிதான் ரசிகரே ! நீர் நம்பாமல் இருக்கலாம். ஆனுல் அப்படிப்பட்ட ஓர் மகிழ்ச்சி ஏற்படுமாயின் அது மனிதத்தன்மைக்கு முரணனதோ மாறுபட்டதோ அல்ல. சொல்லப்போனுல் அந்தத் துயரைக் கணப் பொழுதுக்குக் காண்பதில் மனிதனுக்கு அவன் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாத இன்பம் கூட ஏற்படும்.

**இரசி :** என்னுல் இதை விளங்கிக் கொள்ள முடியவில்லை மகாகவி.

**கம்பன் :** அப்படியாயின் என்னேடு சிறிது நேரம் வாருங்கள் . . . சங்க இலக்கியத்திலிருந்து இரண்டு காட்சிகளைக் காட்டுகிறேன். வருகிறீர்களா ?

**இரசி :** அதற்கென்ன பிரபு ! சங்க இலக்கியக் காட்சிகளை மகா கவியாகிய தாங்களே எனக்குக் காட்டுகிறேன் என்னும்போது நான் என் வராமலிருக்கப் (போய்க்கொண்டு) போகிறேன். இந்தப் பாக்கியம் யாருக்காவது கிடைக்கப்போகிறதா . . ?

**(இசை)**

**(தேரோடுகிறது, குதிரைக் குளம்புகளின் சப்தமும், குதிரைகளின் பிடரியிற் கட்டிய மணிச் சப்தமும் சேர்ந்து ஒலிக்கின்றன)**

**கம்பன் :** பார்த்தீரா. . . . ? ரசிகரே ! தேர் ஓடுவதை..

**இரசி :** ஆம் கவிஞரே. அழகான குதிரைகள் பூட்டப்பட்ட தேர். . . . . . எத்தனை விரைவாக ஓடுகிறது..

**கம்பன் :** ஆமாம் ! விரைவாகத்தான் ஒடுகிறது. பூமியிற் குழிவிழும்படியாக கால்களைக் கொட்டிநடந்து விரைவாகவே குதிரைகள் செல்கின்றன. அரசர்கள் மதிக்கும்படியான அக் குதிரைகளின் பிடரியிற் கட்டப்பட்ட மணிகள் ஒலிக்க வேகமாக, வேகமாகவே செல்கின்றன அப்புரவிகள். ஆம் ! நற்றிணையிலே அகம்பன் மாலாதனர் பாடியிருக்கும் அக்கவிதையில் அந்தத் தேர் செல்லும் அழகைப் பாடுகிறேன் கேளும். . . . . . .

இருநிலம் குறையக் கொட்டிப் பரிந்தின்று
ஆதிபோக்கிய அசைவில் நோன்தான்
மன்னர் மதிக்கும் மான் வினைப்புரவி
கொய்ம் மயிர் எருத்தில்
பெய்ம் மணி ஆர்ப்ப. . . . . . . .

பார்த்தாயா. . . . ? அவை செல்லும் அழகை.

**இரசி :** ஆம் கவிஞரே, என் கண் குளிரப் பார்க்கிறேன். மனங்குளிரப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன்.

**கம்பன் :** அப்படியானுல் அதோ தேரினுள் இருக்கும் அந்த வீரன் தேர்ப்பாகனிடம் ஏதோ சொல்கிறுன். . . . . .அதைக் கேளும். . . .

**காத :** தேர்ப்பாக ! குதிரைகளின் மணியரவம் ஒலிக்கட்டும். விரைவாகக் குதிரைகளைச் செலுத்து. பிரிவாற்ருமையோடு என் காதலி எனக்காகக் காத்துக் கொண்டிருப்பாள். துயர மிகுதியில் அவள் அழுவாள். அவள் மார்பின் முகட்டில் கண்ணீர்த் துளிகள் விழுந்து தெறிக்கும். அப்படியிருந்தும் நான் வந்துவிடுவேன் என்ற நம்பிக்கையில் அவள் எனக்காகக் கஷ்டப்பட்டுச் சமைத்துக் கொண்டிருக்கையில் அவள் முகத்தில் ஓர் முறுவல் தோன்றும். அதைக் காண்போம். விரைவாகத் தேரைச் செலுத்து. . . . . . . .

**தேரோ :** தங்கள் ஆவலையறிந்தது போலக் குதிரைகளும் வேகமாகவே செல்கின்றன. விரைவாகவே வீட்டுக்குப் போய் விடலாம்.

**(குதிரைகளின் குளம்புச் சப்தமும் மணிச் சப்தமும் மங்கித் தேய்கிறது)**

**கம்பன் :** கேட்டீரா இரசிகரே ! அகம்பன் மாலாதனரின் காதலன். தன் காதலியின் துயரக் கோலத்தை எண்ணிப் பார்ப்பதை அந்த எண்ணமே அவன் நெஞ்சை நிறைத்து நிற்கையில் அப்பாடா . . . .அவனுக்கு எத்தனை மகிழ்ச்சி ! எத்தனை இன்பம் !

**இரசி :** ஆனுலும் கடைசியில் அந்தக் காதலன் தன் காதலியின் முகத்திற் தோன்றும் புன்முறுவலையல்லவா எண்ணி எண்ணி இன்பம் அடைகிருன்.

**கம்பன் :** நீர் இப்படிச் சொல்வீர் என்று எனக்குத் தெரியும். அதனுலென்ன ? இதோ அடுத்த தேர் வருகிறது. அதையும் பார்ப்போமே. . . . .

தேர்ச் சப்தம்

**கம்பன் ;** பார்த்திரா. . . .தேர்வருவதை. இரசிகரே ! தேரைப் பார்த்தால் மட்டும் போதாது. இதோ தேர்க்குள்ளிருப்பவன் தேர்ப்பாகனிடம் எதோ சொல்கிறுன். ஆனுல் ஒன்று. இந்தத் தேர்க் குள்ளிருப்பவனது காதலியின் முகத்தில் முறுவலே இல்லை. அதை நீரே காணப் போகிறீர். அதோ அவன் பேசுவதைக் கேளுங்கள்.

**காதல :** தேர் ஓட்டுவதிற் திறமை பெற்ற தேர்ப் பாகனே ! கார்காலம் வந்துவிட்டது. தேனிறைந்த பூக்கள் பூத்து விட்டன. மலர் பூத்த இந்தக் காட்டுப் பாதையில் என் தேர் வரும். . . அவள் காத்துக் கொண்டேயிருப்பாள். என்னைத் தவிர வேறு எவரையுமே எண்ணுதவாறு தன்னைத் தானே கற்பு எனும் தாழால் அடைத்துக்கொண்டு பாவம் ! வீட்டின் மாடியிலே கன்னத்திற் கையை வைத்துக்கொண்டு சோக சித்திரமாக இருப்பாள். அவளை நான் காணவேண்டும். விரைவாகவே தேரைச் செலுத்து.

**தேர்ப்பா :** ஆமாம் காதலரே ! என்ருல் எவ்வளவு விரைவாகத் தேரைச் செலுத்த முடியுமோ அத்தனை விரைவாகவே தேரைச் செலுத்துகிறேன். உங்கள் காதலியின் சோக சித்திரத்தைக் காண்பதிற் தங்கட்கு இத்தனை ஆவலாயின் நம் தேரும் விரைவாகவே சென்று கொண்டிருக்கிறது.

**கம்பன் :** பார்த்திரா. . . . .இரசிகரே ! தன் காதலியின் சோக சித்திரத்தைக் காண்பதில் இந்தக் காதலனுக்கு எத்தனை அவசரமாக இருக்கிறது..... என்று. . . .ஐந்திணை ஐம்பது என்னும் நூலிலே இந்தக் காட்சியைத் தெரிவிக்கும் பாடல் இதோ... (பாடுகிறுன்)

நூல் நவின்றதேர்ப்பாக நொவ்வீதாச் சென்றீக!
தேன் நவின்ற கானத் தெழில் நோக்கித்—
தான்நவின்ற
கற்புத்தாள் வீழ்த்துக் கவுள் மிசைக் கை யூன்றி
நிற்பாள் நிலையுணர்கம் நாம்.

**இரசி :** ஆமாம் புலவரே ! தேரோடும் காட்சியும், அந்தக் காதலனின் அவசரமும் நன்ருகத்தான் இருக்கிறது............ஆனுலும்.........

**கம்பன் :** ஆனுலும் என்ன இரசிகரே ! சொல்லுங்கள் தங்கள் கருத்தை. . . . . . . .

**இரசி :** மகாகவி ! இந்தக் காதலனும் தன் காதலியின் சோகத்தைக் கற்பனையிற் கண்டானே ஒழிய நேருக்கு நேரே அவள் சோகத்தைக் கண்டு இன்புறவில்லையே. . . . ஆனுற் தாங்கள் சீதையின் சோகத்தைக் காண்பதற்கு இராமனுடைய கண்கள் கொடுத்து வைக்கவில்லையே என்று பாடி விட்டீர்களே !

**கம்பன் :** ஆம் பாடினேன். அதிலே என்ன தவறு ? இந்தக் காதலர்கள் கற்பனையிற் கண்டதை இராமன் நேரிலேயே கண்டிருந்தால்......ஆனுல் அவனுக்குத்தான் கொடுத்து வைக்க வில்லையே. . . .

**இரசி :** அதைக் காண்பதால் இராமனுக்கு என்ன பயன் ஏற்பட்டிருக்கும் என்பது எனக்கு விளங்கவே யில்லைக் கவிஞரே.

**கம்பன் :** நன்ருக எண்ணிப் பாரும் இரசிகரே. இராவணன் சீதையைத் தூக்கிக்கொண்டுவந்து விட்டான். இராமனுக்கு இது தெரியாது... தேடுகிறுன். இராமதூதனுகிய அநுமான் சீதையை அசோக வனத்திலே காண்கிறுன்.

**இரசி :** ஆமாம் ! அநுமன் கண்ட சீதையைத்தான் தாங்கள் தங்கள் கவிதா சக்தி முழுவதையும் கொட்டி வர்ணித்திருக்கின்றீர்களே . . . சுற்றிலும் அரக்கர் கூட்டம் அவளைக் காவல் செய்கிறது. சீதாதேவியின் பக்கலில் திரிசடை இருக்கிறுள். இராமனை எண்ணி எண்ணிக் கண்ணீர் சொரியும் அவள் கண்ணீர்க்குளத்தில் மிதக்கும் அன்னம் போல இருக்கிறுள். பிரகாசமற்ற மணி போலவும் பகற்காலச் சந்திரன் போலவும் அவள் இருந்தாள் என்றெல்லாம் தாங்கள் பாடியிருப்பது மனத்தை நெகிழவைப்பதாகத்தான் இருக்கிறது கவிஞரே ! ஆனுலும் இக்காட்சியை இராமன் நேருக்கு நேர் காணத்தான் வேண்டுமா ?

**கம்பன் :** ஆம் இரசிகரே ஆம் ! இக்காட்சியை இராமன் காணத்தான் வேண்டும். என்ன செய்வது ? வான்மீகியின் கதைப் போக்கிலே இதைக் காண்பதற்கு இராமனுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. நானும் உண்டாக்கவில்லை. எனவேதான் காணக் கொடுத்து வைக்கவில்லை என்று பாடினேன். அந்தக் காட்சியை மட்டும் இராமன் கண்டிருந்தால். . . . . . .

**இரசி :** கண்டிருந்தால் என்ன நடக்கும் கவிஞரே..

**கம்பன் :** இரசிகரே ! அந்தக் காட்சியை மட்டும் இராமன் கண்டிருந்தால் இரசிகரே. . . .சீதையின் துயர்க்கோலத்தை இராமன் கண்டிருப்பானுயின், சீதை இராவணனின் இச்சைக்கு இசைந்துவிடாமல் தன் கற்பை காத்துக் கொண்டிருக்கிறுள் என்பதை இராமன் நேருக்கு நேரே அறியும் பாக்கியம் கிடைத்திருக்குமல்லவா. . . ? இந்தப் பாக்கியம் இராமனுக்குக் கிடைத்திருப்பின் சீதை

யின் துயர்க் கோலத்தைக் கண்ட அந்தக் கணத்தில் இராமன் எத்தனை பெருமைப்பட்டிருப்பான் தெரியுமா...? தனக்காகவே தன் காதலி உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிருள் என்பதை உணர்ந்திருப்பினும் அதை நேருக்கு நேர் காணும் போது எந்தக் காதலனுவது பெருமைப்படாமலிருக்கப் போகிருனு....? ஆனுற் பாவம்! இராமன் கண்கட்கு அதை நேரிற் காணக்கொடுத்து வைக்கவில்லையே .....

**இரசி:** ஆமாம் கவிஞரே! அறிந்தேன்; தெளிவாக அறிந்தேன். இப்படி அற்புதமான கருத்தையும் அழகான கவிதையையும் தங்களைவிட வேறு எந்தக் கவியினுலும் பாடவே முடியாது..... ஆம்; அந்தக் கோலத்தை இராமன் கண்டிருக்க வேண்டும். ஆனுல் "காணநோற்றில அவன் கமலக் கண்களே...."

ஒரு வரியில் எத்தனை அற்புதமான கருத்தை எல்லாம் கம்பன் சொல்கிருன்......ஆமாம்.... காணநோற்றில அவன் கமலக் கண்களே"

## சீன-இலங்கை வர்த்தக ஒப்பந்தம்

இலங்கைக்கும், சீன மக்கள் அரசாங்கத்துக்கும் பீக்கிங்கில் நடைபெற்ற வர்த்தக ஒப்பந்தத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த பிரதமர் திரு. பண்டாரநாயக்கா சீனமக்கள் குடியரசுக்கும் இலங்கைத் தூதுக்கோஷ்டியைக் கூட்டாகநடத்திச் சென்று இவ்வொப்பந்தங்களை ஏற்படுத்தியன.மக்காக பாதுகாப்பு வெளிநாட்டு விவகார மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. சுபசிங்கா, நிதிமந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. விஜயசிங்க ஆதியோருக்கும் தமது பாராட்டுரைகளைத் தெரிவித்துக்கொண்டார்.

இவ்வொப்பந்தங்களின் பிரகாரம் இலங்கை சீனுவுக்கு வருடமொன்றுக்குக் குறைந்தது 30,000 மீட்ரிக் தொன் ரப்பரையும் இதர பொருட்களையும் ஏற்றுமதி செய்ய வேண்டும். மொத்த ஏற்றுமதியின் பெறுமதி 950 லட்சம் ரூபாவாக இருத்தல் வேண்டும். சீனுவும் அரிசியையும் இதர பொருட்களையும் 950 லட்சம் ரூபாவுக்கு இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும். இதில் குறைந்தது 200,000 மீட்ரிக் தொன் அரிசியாவது இடம் பெறுதல் வேண்டும். இவ்வர்த்தகம் நாளடைவில் மேலும் விரிவாக்கப்பட்டு 1,650 லட்சம் ரூபாவரை இருதரப்பிலும் வர்த்தகம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. பண்டாரநாயக்கா இவ்வொப்பந்தத்தின் பயனுக 175 லட்சம் ரூபா வீதம் இலங்கைக்கு வருடம் தோறும் ஐந்து வருடங்களுக்குச் சேருமெனவும் இத்தொகையை உபயோகித்து சீனப் பொருட்களை இங்கு இறக்குமதி செய்யலாமெனவும் குறிப்பிட்டார். அவ்விதம் சீனப்பொருட்களை இறக்குமதிசெய்யமுடியாது போனுல் சீனு இப்பணத்தைக் காசாகவே நமக்குத் திருப்பித்தர வேண்டுமென்றும் ஏற்பாடாகியிருப்பதாக அவர் கூறினுர்.

சீனு முன்னர் போல் இலங்கையின் ஷீட்ரப்பருக்கு மிகக்கூடிய "பிரிமியம்" விலை தரமுடியாது போன தற்குரிய காரணங்களையும் பிரதமர் விளக்கினுர். "மலேயாவின் வர்த்தகத்தடை நீக்கப்பட்டுவிட்டதால் அங்கிருந்து சீனுவுக்கு ரப்பரை ஏற்றுமதி செய்ய முடியும். இதன் பயனுக சிங்கப்பூர் விலையின் அடிப்படையிலேயே ரப்பர் விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அரிசி விலையும் இவ்வாறே பர்மிய விலைக்கேற்ப நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது". என்று பிரதமர் விளக்கினுர்.

சீனு—இலங்கைப் பொருளாதார ஒப்பந்தத்தின் கீழ் ஐந்து வருடங்களுக்கு சீனு இலங்கைக்குப் பொருளாதார உதவிசெய்து வரும். மொத்தம் 750 லட்சம் ரூபா இவ்வாறு அளிக்கப்படும். ஆனுல் இவ்வுதவி பணமாக அளிக்கப்படமாட்டாது. நுகர்வுப் பொருட்களாகவே அளிக்கப்படும்.

## விநாயகபுரம் கிராம முன்னேற்றச் சங்க ஆருவது ஆண்டு நிறைவு விழா

ஓமந்தைப் பகுதியைச் சேர்ந்த விநாயகபுரம் கி. மு. சங்கத்தின் ஆருவது ஆண்டு நிறைவு விழா காரியாதிகாரி திரு. செ. சிவஞானம் அவர்கள் தலைமையின்கீழ் இ. இராசையா அவர்களின் தேவாரத்துடன் ஆரம்பித்தது. காரியதரிசியால் முன்கூட்ட அறிக்கை வாசிக்கப்பெற்று சபையோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. காரியாதிகாரி திரு. செ. சிவஞானம் திரு. எஸ். சிவகுருநாதர், பண்டிதர் திரு. செ. சிவலிங்கம், திரு. எஸ். பெர்ணுண்டோ என்போர் பேசியபின்னர் நடப்பு வருட உத்தியோகத்தர் தெரிவு செய்யப்பட்டார்கள். 1. தலைவர் திரு. வி. சின்னத்துரை, 2. செயளாளர் இ. இராசையா, 3. உபதலைவர் க. பொன்னுத்துரை, பொருளாளர் திரு. பொ. நல்லதம்பி. பின்வருவோர் மாதர் முன்னேற்றச் சங்க உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள். தலைவி திருமதி ப. சின்னத்துரை. செயளாளர் செல்வி. சி. சிவக்கொழுந்து, உபதலைவி திருமதி. த. கணபதிப்பிள்ளை, பொருளாளர் திருமதி. நா. பொன்னுத்துரை. ஈற்றில் சிற்றுண்டி தேநீர் விருந்துடன் காரியதரிசி திரு. இ. இராசையா அவர்களின் நன்றி- பாராட்டலுடன் விழா இனிது நிறைவேறியது.

# மக்கள் ஆட்சியின் சாதனை

## தொழில் மந்திரியின் வானொலிப் பிரசங்கம்

**தொழில், வீடமைப்பு, சமூக சேவா மந்திரி திரு. ரி. பி. இலங்கரத்தின அவர்கள் இம்மாதம் இலங்கை வானொலியில் சிங்கள மொழியில் ஒலிபரப்பிய ஒரு சொற்பொழிவில் இப்புதிய அரசாங்கம் பதினெட்டு மாதகாலக்துக்கு முன் அதிகாரத்துக்கு வந்தது முதல் மக்களின் வாழ்க்கைத் தரங்களை உயர்த்தும் பொருட்டு அது எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளை விவரித்துக்கூறினர். ஒலிபரப்பப்பட்ட சொற்பொழிவின் சாராம்சம் பின்வருமாறு :—**

மக்களின் அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டு சரியாக பதினெட்டு மாதங்கள் கழிந்து விட்டன. ஆகவே நாம் கடந்த காலத்தைப் பற்றியும் நிகழ்ந்த காலத்தைப்பற்றியும் எதிர் காலத்தைப் பற்றியும் சிந்தித்தல் பொருத்தமானதாகும்.

கடந்த வருடம் ஏப்ரில் மாதத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் இலங்கைப் பெருமக்கள் பிற்போக்கு வாதிகளை விரட்டியடித்துவிட்டு தங்களோடு நெருங்கிய தொடர்பு வைத்துக் கொண்டிருந்தவர்களைத் தங்கள் பிரதிநிதிகளாகப் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்தார்கள். மக்கள் ஐக்கிய முன்னணியும் இதனை ஆதரித்த கட்சிகளும் தேர்தல்களில் வெற்றி வாகை சூடின. இந்த வெற்றியானது இலங்கையின் சரித்திரத்திலேயே ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். உலகின் பல பாகங்களிலுமுள்ள அரசியல் ஞானிகள் இவ்வெற்றியைப் போற்றிப் புகழ்ந்தனர்.

### மக்கள் விருப்பமே

முதலாளித்துவம், ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம் ஆதியாம் தீமைகளிலிருந்து மக்கள் அரசாங்கம் தங்களைக் காப்பாற்றி இரட்சிக்க வேண்டுமென்பதையே மக்கள் எதிர்பார்த்தார்கள். இத்தீமைகளை நாட்டிலிருந்து ஒழித்துக்கட்ட கடந்த 18 மாதகாலத்தில் இவ்வரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டுள்ள தென்பதை ஆராய்வோம்.

முதலாவதாக, ஏகாதிபத்தியத்தின் சின்னங்களாகக் காட்சியளித்துக் கொண்டிருப்பனவற்றைக் களைந்தெறிவதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதென்பதைக் கவனிப்போம். இலங்கையில் ஓர் அந்நிய வல்லரசின் கட்டுப்பாட்டின் கீழிருந்த இராணுவத்தளங்களை நாங்கள் எடுத்துக் கொண்டு விட்டோம். ஒக்டோபர் மாதம் 15 ந் திகதியன்று திருக்கோணமலையில் இலங்கையின் கொடி பறக்க விடப்பட்டது. நவம்பர் மாதம் 1 ந் திகதியன்று கட்டுநாயக்கா விமானத்தளம் இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. திருக்கோணமலைத் துறைமுகம் 150 வருடகாலத்துக்குப் பின் மீண்டும் எமக்குச் சொந்தமாயிருக்கிறது. எனவே எமது அனுமதியின்றி எவரும் இதனை இனிமேல் உபயோகிக்க முடியாது.

இலங்கையை ஒரு குடியரசு நாடாகப் பிரகடனஞ் செய்யும் நோக்கத்துடன் அரசியல் சட்டத்தில் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள் பற்றி அறிக்கை சமர்பிப்பதற்கு ஒரு கொமிஷன் நியமனஞ் செய்யப்பட்டிருப்பது சரித்திர முக்கியத்துவம் பெறும் மற்றோர் நடவடிக்கையாகும்.

### ராஜீயத் தொடர்பு

சோவியத் ருஷியா, சீனமக்கள் குடியரசு, எகிப்து ஆசிய நாடுகளுடனும் பல கிழக்கைரோப்பிய நாடுகளுடனும் நட்புறவு ஏற்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன் அந்நாடுகளுடன் ராஜீயத் தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இது எத்துணை விவேகமான நடவடிக்கை என்பது, அந்நாடுகளால் இலங்கைக்களிக்கப்படும் கூடுதலான பொருளாதார ஒத்துழைப்பைக் கொண்டும் உதவியைக் கொண்டும் ஏற்கெனவே நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இத்தனை காலமாக அதிகாரத்திலிருந்து வந்த முதலாளித்துவ வர்க்கத்தினராலும் நிலப் பிரபுத்துவ வர்க்கத்தினராலும் மக்கள் அனுபவித்துவந்த துன்பங்களிலிருந்து அவர்களை மீட்கப் பொருளாதாரத் துறையில் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த வர்க்கத்தினர் மீண்டும் தலைதூக்க முடியாத வகையில் முறியடிக்கப்பட்டு விட்டனர். எனவே மக்களின் பெறுமதி இனிமேல் அவர்களின் செல்வத்தைக் கொண்டும் சமூக அந்தஸ்தைக் கொண்டும் கணிக்கப்படமாட்டாது. மக்களுக்குச் சேவை செய்பவர்களுக்கு மட்டுமே இனி உயர்ந்த மதிப்பளிக்கப்படும்.

தேசீய செல்வத்தை நியாயமாகப் பகிர்ந்து, மக்களின் வாழ்கைத் தரத்தை உயர்த்துவதற்கு மக்கள் அரசாங்கத்தால் பின்வரும் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. தேசியச் செல்வத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் காணி அபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி, கைத்தொழில்

அபிவிருத்தி, நீர் வீழ்ச்சி மின்சார அபிவிருத்தி முதலியவற்றிற்கு அரசாங்கம் பெருந் தொகையான டணங்களை ஒதுக்கி இருக்கிறது.

### அபிவிருத்தித் திட்டங்கள்

வளவைத் திட்டம், புதிய மினிப்பேத் திட்டம், மஹாகந்தராவைத் திட்டம், கிறித்தலைத் திட்டம், கல்லோயாத் திட்டம், என்பவற்றை மேலும் அபிவிருத்தி செய்தல் போன்ற பல முக்கியமான திட்டங்களை காணி அபிவிருத்தி மந்திரி காரியாலயம் மேற்கொண்டிருக்கிறது.

கரும்புச் செய்கை, பருத்திச் செய்கை, புகையிலைச் செய்கை ஆகிய பிரமாண்டமான மூன்று திட்டங்களை விவசாய மந்திரி காரியாலயம் மேற்கொண்டிருக்கிறது.

சீனி, சிமெந்து, ஓடுகள், மீன்பிடித் தொழில் ஆதியாம் கைத்தொழில்களை விருத்தி செய்யக் கைத்தொழில் மந்திரி காரியாலயம் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. பசளைகள் போன்ற பல புதிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க விசாரணைகளையும் இம்மந்திரி காரியாலயம் செய்து வருகிறது.

தேசிய வருவாயை அதிகரிக்கும் நோக்கத்துடன் நாட்டின் கைத்தொழில் அபிவிருத்தியைப் பாதுகாத்தற்கு இங்குள்ள நீர்வளங்களைக் கட்டுப்படுத்தி உபயோகிக்கும் வழிகளைக் கண்டுபிடிக்கும் பொருட்டு ஒரு விசேட ஆலோசனைச் சபையை நியமிப்பதற்குப் போக்குவரத்து மந்திரி காரியாலயம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இவ்வாறு, நாம் எமது தேசிய வருவாயை அபிவிருத்தி செய்தற்காக பல நிகழ்ச்சிகள் அடங்கிய ஒரு வேலைத் திட்டத்தை மேற்கொண்டுள்ளோம்.

### சோஷலிஸ அமைப்பு முறை

சமுதாயத்தின் அமைப்பு முறையை ஒரு சோஷலிஸ முறையாக மாற்றுதற்கு அரசாங்கம் சட்ட பூர்வமான அநேக நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

மேலும் தொழில் கொடுத்தல் சம்பந்தமாக, அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் அதிக வேலைகளை அளிக்கத்தக்கனவாக வகுத்தமைக்கப் படுகின்றன.

மக்கள் அரசாங்கம் தனது 18 மாத ஆட்சிக் காலத்தில் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பாரிய முயற்சிக்கு அத்திவாரத்தை மட்டுமே இட்டிருக்கிறது.

தேசிய அபிவிருத்திக்கான வேலைகளில்அரசாங்கத்துக்குப் பூரண ஒத்துழைப்பளிப்பதும் தேசியச் செல்வத்தை அதிகரிக்க உதவுவதும் அவற்றின் மூலம் மக்கள் அரசாங்கத்திடமிருந்து தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதுமே தொழிலாளர் வகுப்பின் கடமையாகும்.

எனவே சகல தொழிலாளரும் தத்தமக்குரிய தாபனங்களில் சொந்தமாகத் தொழிற் சங்கங்களை நிறுவிக்கொள்ள வேண்டுமென்றும், தமது முதலாளிமாருடன் இணைந்து வேலைசெய்ய வேண்டுமென்றும், அதே நேரத்தில் அரசாங்கத்தின் ஒத்துழைப்பையும் சம்பாதித்துக்கொள்ள வேண்டுமென்றும் நான் இவர்களை மனப் பூர்வமாக வேண்டிக்கொள்கிறேன்.

இங்ஙனம் செய்வதால் தேசிய பொருளாதாரச் சுதந்திர இலட்சியத்தை நிறைவேற்றுதற்கு அவர்கள் உதவக்கூடும்.

---

# இலங்கையைக் குடியரசு நாடாக்கும் பிரேரணை

**பாராளுமன்றத்தில் பிரதமரால் சமர்ப்பிக்கப்பட்டது**

**1946, 1947 ம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட அரசியல் அமைப்பு, சுதந்திரம் பற்றிய சட்டங்களைத் திருத்துவது பற்றியும் இலங்கையை ஒரு குடியரசு நாடாக்குதல், அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளித்தல், செனட்சபையினுடையவும் சனப்பிரதிநிதிகள் சபையிலுள்ள நியமன அங்கத்தினர்களுடையவும் வருங்காலம், அரசாங்கசேவைக் கொமிஷன், நீதிசேவைக் கொமிஷன் ஆகிய விஷயங்களைப் பற்றியும் ஆராய்வதற்குச் சனப்பிரதிநிதிகள் சபை, செனட்சபை ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கொண்ட கூட்டுப் பொறுக்குக் கொமிட்டியொன்றை நியமனஞ் செய்யவேண்டும்.**

இப்பிரேரணையைச் சமர்ப்பித்த பிரதம மந்திரி அவர்கள் தொடர்ந்து பேசியதாவது :

"இதேபோன்ற ஒரு பிரேரணையைக் கடந்த கூட்டக்கால முடிவில் நான் கொண்டு வந்தேனென்பதும் அது ஏகமனதாக ஏற்றுக்கோள்ளப்பட்டதென்பதும் சபையோருக்கு ஞாபகமிருக்கலாம். எனவே இந்தக் கொமிட்டியில் சேவை செய்வதற்குச் சனப்பிரதிநிதிகள் சபையைச் சேர்ந்த அங்கத்தவர்கள் எத்தனைபேர், செனற்சபையைச் சேர்ந்த அங்கத்தவர்கள் எத்தனைபேர் நியமனஞ் செய்யப்பட வேண்டுமென்பதை அறிந்து கொள்ளும் அவசியம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது.

தற்போதைய பிரேரணையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அதாவது முந்திய பிரேரணையில் நியமனஞ் செய்யப்பட வேண்டிய அங்கத்தவர்களின் தொகை குறிப்பிடப்பட்டிருந்தது.

(30 ம் பக்கம் பார்க்க)

# அரசாங்க ஊழியர்களுக்குப் புதிய சலுகைகள்

1957 ம் ஆண்டு நடைபெற்ற வேலை நிறுத்தத்தின் போது வேலை நிறுத்தஞ் செய்யதவர்களுக்குப் பாதமாகவும், வேலை நிறுத்தஞ் செய்யாதவர்களுக்குச் சாதமாகவும் அவர்களது சேவை பற்றிய குறிப்பு இடாப்புகளில் பதிவு செய்யப்பட்டுள்ள எல்லாக் குறிப்புக்களும் நீக்கப்பட வேண்டுமென்பது பற்றி அகில இலங்கை அரசாங்க ஊழியர் தொழிற் சங்க சம்மேளனத் தலைவர் திரு. கிளாட்ஸ்ரன் அமரசேகராவின் தலைமையில் சென்ற ஒரு தூது கோஷ்டிக்கும் நிதி மந்திரி திரு. ஸ்ரான்லி டி சொய்ஸா அவர்களுக்கு மிடையில் நவம்பர் மாதம் 1 ந் திகதி வெள்ளிக்கிழமையன்று நடைபெற்ற ஒரு மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

1947 ம் ஆண்டு வேலை நிறுத்தஞ் செய்தவர்களின் சம்பளங்கள் குறைக்கப்பட்டது பற்றி விவாதிக்கப்பட்ட போது, தனிப்பட்டவர்களின் தொழிற்துறையில் இப்போது காணப்படாத ஒரு கொள்கையை இது பாதிக்கின்ற தென்பதன் காரணத்தால் குறைக்கப்பட்ட சம்பளத்தை இக்கட்டத்தில் திருப்பிக் கொடுப்பது அசாத்தியமான காரியமென நிதி மந்திரி அவர்கள் விளக்கிக்கூறினர்.

நிதி மந்திரி அவர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்திய பின்னர் சங்கம் அடைந்துள்ள நன்மைகளை சம்மேளனத் தலைவர் திரு. கிளாட்ஸ்ரன் அமரசேகரா ஓர் அறிக்கை மூலம் வெளியிட்டார்.

சம்பள முரண்பாட்டுக் கொமிஷன் அறிக்கைபற்றி நிதி மந்திரி அவர்கள் பின்வருமாறு கூறினர்: பொது சேவைகள் சம்பந்தமான அறிக்கைகள் தயாராகிவிட்டன. இவை இம்மாத மத்தியில் வெளியிடப்படும். இதர சேவைகள் சம்பந்தமான அறிக்கை இம்மாதக் கடைசியில் வெளியிடப்படும். சம்பளக் கொமிஷனில் பிரதிநிதித்துவம் வகிக்க சம்மேளனத்தால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளின் பெயர்கள் பிரதம மந்திரி அவர்களிடம் சமர்ப்பிக்கப்படும்.

வாழ்க்கைச் செலவுப் புள்ளி விபரங்களைப் பரிசீலனை செய்ய ஒரு கமிட்டி நியமனஞ் செய்யப்படும்.

நாட்சம்பளம் பெறும் ஊழியர்களை மாதச் சம்பள அடிப்படையில் அமர்த்தி, இளைப்பாற்றுச் சம்பளம் ஆகிய நன்மைகளை அவர்களுக்கு வழங்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

பழைய அரசாங்க ஊழியர்களுக்கும் புதிய அரசாங்க ஊழியர்களுக்குமிடையில், இளைப்பாற்றுச் சம்பளம், விடுமுறை முதலியன சம்பந்தமாகக் காணப்படும் வேற்றுமைகளை நீக்கிவிட மந்திரி சம்மதித்தார்.

நுவரெலியா சகாயப்பணம் சம்பந்தமான பிரச்னை பரிசீலனை செய்யப்பட்டு வருகிறதென்றும் இது பற்றி விரைவில் ஒரு முடிவு செய்யப்படுமென்றும் மந்திரி கூறினர்.

உத்தியோக மாற்றங்களைச் செய்தற்குச் சங்கப் பிரதிநிதிகளைக் கொண்ட சபைகள் இருக்க வேண்டுமென்ற தூதுகோஷ்டியினரின் நோக்கங்களைத் தாம் பொதுவாக ஏற்றுக் கொள்ளவதாக மந்திரி தெரிவித்தார். உத்தேசிக்கப்பட்டுள்ள உத்தியோக உயர்ச்சிச் சபைகளின் விஷயத்தைத் தாம்கவனமாகப் பரிசீலனை செய்ய வேண்டுமெனவும் அவர்கூறினர்.

பொருத்தமற்ற நிர்வாக ஒழுங்கு விதிகளை திருத்துதல் சம்பந்தமான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

பிரதான தொழிற் சங்கங்களின் வருடாந்த மகாநாட்டில் கலந்து கொள்வதற்கு ஒரு நாள் கடமை லீவும் இலவச புகையிரத போக்குவரத்துச் சீட்டுகளும் வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

சங்கங்களே சம்பளத்தைக் கொடுக்குமாயின் தொழிற் சங்கக் காரியதரிசிகளுக்கு அவர்களுடைய உத்தியோகக் கடமைகளிலிருந்து ஓய்வு கொடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

---


**நூல்நலனுய்வு :**

**சதாரம்** 30 சதம் .. **பூசணியாள்** 30 சதம்

தொகுப்பாசிரியர் : அருள் செல்வநாயகம்.

வெளியீடு : சரஸ்வதி புத்தகசாலை, 175, செட்டியார் தெரு, கொழும்பு.

சதாரம், பூசணியாள் என்ற இரு கிராமியக் கதைகளைக் கிராமிய இலக்கியச் செல்வங்களின் வரிசையில், தொகுத்துத் தந்துள்ளார் அருள் செல்வநாயகம் அவர்கள். சதாரம், பூசணியாள் எனும் இரு கதைகளும் ஈழநாட்டாருக்குப் புதியவை அல்ல. ஆனல் நம்நாட்டில் ஆங்காங்கே எழுத்து வடிவில் வராது ஏட்டுச் சுவடிகளிலும், முதியோர்களின் நெஞ்சிலும் புதைந்து கிடக்கும் கிராமியச் செல்வங்களை நூல் வடிவில் வெளியிடும் பணியை ஒரு சிலரே செய்து வருகின்றனர். இச்சிலரில் அருள் செல்வநாயகம் அவர்களும் ஒருவராகத் திகழ்வது கண்டு மகிழ்ச்சியடைகிறேம். கிராமியக் கதைகளும், கவிதைகளும் நாட்டின் புராதன வாழ்க்கையை ஒருவாறு படம் பிடித்துக் காட்டுகின்றன. அவற்றைச் சேகரித்து வெளியிட வேண்டியது அறிஞர்கடன். இப்பணியில் இறங்கி அருந் தொண்டாற்றி வரும் சரஸ்வதி புத்தகசாலை அதிபர் திரு. த. பத்மநாதையர் அவர்களைப் பாராட்டி ஊக்கிவிடுவது தமிழர்தங் கடனகும்



ஆண்சிங்கமும், பெண்சிங்கமும்.

# மரக்கலை

[ஹெரல்ட் டி மெல்]

மரக்கிளைகளை அல்லது வேர்களை முறையாக வெட்டி கலை உருவங்களைத் தோற்றுவிக்கலாம். இவ்வேலையை நாம் "மரக்கலை" என்கிறோம். இக்கலை நமக்கு மாத்திரம் தெரிந்த, புதிய கலையல்ல. மனிதன் எழுத்துவாசனையற்று, காட்டில் குகைகளிலும், பெருமரப் பொந்துகளிலும் வாழ்ந்து வந்த காலத்திலேயே இக்கலையும் தோன்றிவிட்டது. நமது ஆதி மூதாதையர் மிருகங்களின் உருவங்களையும் மனிதனின் தோற்றத்தையும் எடுத்துக்காட்ட இதே கலையை எடுத்தாண்டிருக்கின்றனர். இன்றும் சில கலைஞர்கள், வளைந்த பல கிளைகளையுடைய மரத்துண்டுகளைக்கொண்டு அற்புதமான பல உருவங்களை உருவாக்கி வருவதை நாம் காணுகிறோம்.

அண்மையில் கொழும்பு கலாபவனத்தில் மரக்கலைக் கண்காட்சி யொன்று நடைபெற்றது. இக்கண்காட்சியினதும், இக்கட்டுரையினதும் நோக்கம் பள்ளிமாணவர்களிடையேயும், வாலிபர்களிடையேயும், மரக்கலையைப் பரப்புவதாகும், இத்துறையில் ஈடுபடுவத்கு விசேடதிறமை அவசியமில்லை. பெருந்தொகைப்பணம் தேவையில்லை, நல்ல கற்பனாசக்தியே போதும். இதனை சிறந்த பொழுது போக்குக் கலையாகக் கொள்ளலாம்.

## கற்பனை

கவிஞனின் கவிதைவளம் அவன் கண்டதற்கும், கேட்டதற்கும் உயிரளிக்கும். ஆனால் கற்பனை கவிஞனின் எகபோக உரிமையல்ல. அதியற்புதமான கற்பனை இளமையிலே தோன்றுகின்றது. வயதுமுதிரும் பொழுது இக்கற்பனாசக்தியை கலைத்துறையிலோ தொழிற் துறையிலோ புகுத்த முடியும். கலைத்துறையில் புகுத்தப்பட்ட கற்பனை வளந்தான் பேனா மன்னர்களையும், பாரதிகளையும், கலை அறிஞர்களையும் நாடகாசிரியர்களையும் தோற்றுவித்துள்ளது; தொழிற்துறையில் புகுந்த கற்பனை விஞ்ஞானிகளையும், கண்டுபிடிப்பாளர்களையும் உருவாக்கியுள்ளது.




குரங்கு தாவிப்பாய்கிறது.


## நீல வானம்

நீலவானிலே மேகக்கூட்டங்கள் சஞ்சரிக்கின்றன. மேக மண்டலத்தை யாராவது கூர்ந்து நோக்கினால் எத்தனையோ அற்புதக் காட்சிகளைக் காணலாம். அங்கொரு மந்தைகளின் கூட்டம்; இங்கொரு சேனையின் அழகிய காட்சி; அப்பாலொரு குதிரை. ஒரு காட்சி மறைந்து இன்னொரு காட்சியாக சினிமாத் திரையில் காணும் பற்பல காட்சியைப் போன்றவைகளை ஆகாயத்திலே நாம் கண்டு களிக்கலாம்.

## சந்திரன்

சந்திரனைப் பற்றித்தான் எத்தனை கதைகளும் காட்சிகளும்! சிலர் சந்திரனில் முயல் இருப்பதாகக் கூறுகின்றார்கள். மற்றுஞ் சிலர் (மேல் நாட்டார்) சந்திரனில் லாந்தரைக் கையிலேந்திய ஒரு மனிதனும், விறகுக் கட்டும் ஒரு நாயும் இருப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் நாம் இவற்றை அங்கே காணமுடியவில்லை. ஒரு வேளை கவிஞர்கள் தங்கள் கற்பனையில் தோன்றியதை எழுதிவைத்துவிட்டுச் சென்றதினால் நாம் இவை யெல்லாம் வெண்ணிலாவில் இருப்பதாகக் கருதுகின்றோம். சந்திரனில் ஆமையைக் காண்பாரும், கழுதையைக் கவனிப்பாரும் உண்டு. ஆனால் எல்லோரும் காண்பதென்ன சந்திரனின் தண்மதி முகத்தைத்தான்.





6—நரி

7—ஒட்டகம்

8—கரணம் போடுவன்

9—முயல்

10—மரை

11—புலியின் வாயில் மான்

12—மயில்

13—கிராமப் பெண்

14—அன்னம்

15—தீக்கோழி

16—பொலிஸ்காரன்

17—உடும்பு

18—வெட்டுக்கிளி

19—ஒட்டைச்சிவிங்கி



மைக்கறை.



### தாரகைகள்

நள்ளிரவிலே வெளுத்த வானத்திலே காணும் நட்சத்திரக்கூட்டத்தின் அற்புதக் காட்சியை என் னென்று வர்ணிப்பது ! நம்முன்னேர்கள் வான வெளியிலே தோற்றும் நட்சத்திரங்களை ஒழுங்கற்ற வெளிச்சங்களாகக் கருதவில்லை. பூமியில் அழகாக சித்திரிக்கப்பட்டிருப்பவை போன்று, ஆகாயத்திலும் அவை சித்திரிக்கப்பட்டிருப்பதைக் கண்டனர். ஒவ் வொரு தாரகையிலும் விதவிதமான உருவத்தைக் கண்ட அவர்கள் எத்துணை கற்பனை வளம் வாய்ந்த வர்களாயிருத்தல் வேண்டும். ! அங்கே இடபத்தை யும், விருச்சிகத்தையும், சிங்கத்தையும், மீனத்தை யும், கும்பத்தையும் காணும் பொழுது உண்மை யில் நம்மனம் குதூகலிக்கவே செய்யும்.

ஈழநாட்டின் மலைகளுக்கும், குன்றுகளுக்கும் ஆறுகளுக்கும் எம்முன்னேர் அளித்திருக்கும் அழ கிய பெயர்களைக் கொண்டு அவர்களின் கற்பனை வளத்தை ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம். குரு நாகல் (யானைக்கல்) இப்பாகலை (ஆமைக்கல்) மொன ருகலை (மயிற்கல்) ஆனையிறவு, குதிரைமலை போன் றவை இதற்குச் சான்று பகருகின்றன. குழந்தைப் புத்திப் பரீட்சையின் போது மைக்கறையும் பரீட் சிக்கப்படுகின்றது. அதனை நீங்கள் தலைகுப்புறத் திருப்பியோ, பக்கத்திற்கு சரித்தோ ஏதோ உருவத்தை காண முயலவேண்டும். உங்களின் கற் பனை அதில் ஒன்று அல்லது பல உருவங்களைத் தோற்றுவிக்கும். இதிலிருந்து உங்களின் கற்பனு சத்தியை அறிந்து கொள்ளலாம். தேசப் படத்தை நோக்கினல் அதில் நாம் காணும் காட்சிகளுக்கு அளவுண்டா. ?

### மரக்கிளைகளும் வேர்களும்


நாம் இப்பொழுது மரக்கலைக்கு வருகிறேம். இயற் கையில் பூரணமானதோர் கலையைக்காண நமக்கு நிர்மாண கற்பனுசக்தி வேண்டும். நீங்கள் பல கொம்புகளையுடைய ஒரு மரத்துண்டைக் கண்டதும், அதன் ஒரு பகுதியை வெட்டித் தலைகுப்புறவோ



கண்டி நடனம் ஆடும் தோற்றம்.



மனித முகம் தெரிகிறதா ?



குள்ள நரிபோலக் காட்சியளிக்கும் மரக்கிளை.

மற்றெவ்விதமோ திருப்பினால் அங்கே ஒரு மனித உருவைக் காணவேண்டும். உங்களுக்கு அவசியமான ஒரு உருவத்தைத் தோற்றுவிக்க, கத்தி கொண்டு செதுக்க வேண்டி ஏற்படலாம். ஆனால் நன்றாகச் செதுக்குவதன் மூலம் நீங்கள் விரும்பிய உருவத்தின் அழகான தோற்றத்தைக் கெடுத்துவிட முடியும். அதனால் இயற்கையான தோற்றத்திற்கு போதிய சந்தர்ப்பம் அளிக்க முயலுவது நல்லது. 6 முதல் 10 அங்குல நீள அகலமுள்ள உருவங்களே அழகான தோற்றமளிப்பவை.

### பொருட்களைப் பெறுமிடங்கள்

அடிக்கடி வெட்டி வீசப்படும், அல்லது நறுக்கி ஒதுக்கப்படும் செடிகளிலிருந்து இதற்குத் தேவையான தடிகளைப் பெறமுடியும். மிகவும் கவனமாக இருந்தால் போதியளவு தடிகளை இதற்கெனப் பெற்றுக் கொள்ளலாம். இதற்காக செடிகளை வேரோடு பிடுங்கவோ, வெட்டவோ கூடாது. இக்கலையை சிக்கனமான முறையில், பொழுது போக்கு முறையில் விருத்தி செய்வதன் மூலமாக உங்களின் கற்பனா சக்தியை வளர்க்கவும், நீங்கள் தங்கியிருக்கும் இடங்களை அழகு செய்யவும் முடியும். இதனைச் சிறுவர் மாத்திரமன்றி பெரியவர்களும் பொழுது போக்காகக் கொள்ளலாம். இவற்றை ஞாபகப் பொருட்களாகப் பொருள் கொடுத்து வாங்க விரும்புபவர்களும் இருக்கிறார்கள். இக்கண்காட்சியில் வைத்திருக்கும் பொருட்களை லண்டனுக்கும், பிரான்சுக்கும், அடுத்த வருடம் கொண்டு செல்லக் கருதியுள்ளோம். இக்கலையை வளர்ப்பதன் மூலமாக நாம் புதியதோர் குடிசைத் தொழிலை வளர்த்தவர்களாவதோடு, வெளிநாட்டாருக்கு ஞாபகப் பொருட்களாக இவற்றை வழங்கவும் உதவி செய்தவர்களாவோம்.

# தமிழ்த் திருவாளர் மணி திருநாவுக்கரசு முதலியார்

(ஆசிரியர் மறைமலையடிகள் எழுதியது)

*[சீடனைப்பற்றி குரு எழுதும் பாக்கியம் கிடைப்பது மிக வரிது. அத்தகைய பாக்கியம் பெற்றவர்களுள் தென்னிந்தியாவில் **மணி. திருநாவுக்கரசு முதலியாரும்** ஈழநாட்டில் **சுப்பிரமணியபிள்ளையும்** தலைசிறந்தவர்கள் எனலாம். ஆனால் சுப்பிரமணியபிள்ளையைப்பற்றி நாவலர் பெருமான் எழுதிய நூல் அழிந்துவிட்டது. மறைமலையடிகள் எழுதிய கட்டுரை மட்டும் காணப்படுகின்றது. அடிகளார் தம் சீடன்மீது வைத்திருந்த அன்பையும் அவருடைய கட்டுரை வன்மையையும் காட்டு முகமாகவமைந்துள்ள இக்கட்டுரையினைப் பிரசுரிக்கின்றோம்.]*

நமது பொதுநிலைக் கழக முதன் மாணவரும் சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ் ஆசிரியருமான மணி. திருநாவுக்கரசு முதலியார் வைகாசி க0- ஆம் நாள் சனிக்கிழமை (23-5-1931) முற்பகலில் திடீரென இம்மண்ணுலக வாழ்வுநீத்து விண்ணுலகு புகுந்த செய்தி, இத்தமிழ் நாட்டவர் எல்லாரையும் திடுக்கிடச் செய்து, அவர்க்குப் பெருந்துயரைத் தருவதொன்றாய் எங்கும் பரவலாயிற்று. முகிழ்த்து மணங் கமழ்ந்து அழகாய் மலரும் பருவத்தே ஓர் அரிய செங்கழுநீர்ப் பூ அதனருமையறியான் ஒருவனாற் கிள்ளி யெறியப்பட்டு அழிந்தாற்போலவும், மறைநிலாக் காலத்தே திணிந்து பரந்த இருளின்கட் செல்லும் நெறி இதுவெனக் காட்டுதற்கு ஏற்றிவைத்த ஒரு பேரொளி விளக்குச் சடுதியில் வீசிய சூறைக் காற்றினால் அவிந்து மறைந்தாற்போலவும், நீண்ட நாள் வறுமையால் வருந்திய ஒருவன் புதையலாய்க் கண்டெடுத்த பொன் நிறைந்த குடம் ஒன்று வன்னெஞ்சக் கள்வனொருவனாற் கவர்ந்துகொள்ளப்பட்டாற் போலவும், இத்தமிழ் நாட்டுக்கு ஒரு கல்வி மலராய், ஓர் அறிவு விளக்காய், ஓர் அருங்குணப் புதையலாய்த் தோன்றிய இவ்விளைஞர் தமது 43 ஆம் ஆண்டில் கதுமெனக் கூற்றுவனாற் கவரப்பட்டது ஒரு பெருங் கொடுமையன்றோ! இச் சென்னைமாநகரின் வட பகுதிக்கு **மணி. திருநாவுக்கரசு முதலியாரும்** இதன் தென் பகுதிக்குத் **திரு. வி. கலியாணசுந்தர முதலியாரும்** இருபெருங் கண்களாய்த் திகழா நின்றனர்; அவற்றுள் ஒரு கண்ணை இழந்து இப்போதிது துயர் கூர்ந்து நிற்கலாயிற்றே! ஞாயிறு திங்கள் என்னும் இரண்டில் ஒன்று அழிந்து மறைந்தால் திரும்பவும் அதனையொப்பதொன்றனைப் பெறுதல் இயலுமோ? அது போலவே, இவ்வருமைத் தமிழ் மகனாரை யொப்பார் ஓர் இளைஞரைத் திரும்பவும் யாம் பெறக் கிடைப்பது அரிதரிது!

இவர் 1888 ஆம் ஆண்டு இவர்தம் பெற்றோர் ஆற்றிய தவத்தின் பயனாய்ச் செங்கற்பட்டு மாகாணத்தில் உள்ள மணிமங்கலம் என்னும் ஊரிற் பிறந்தார். இவருடன் பிறந்தாரில் இவர்தம் தம்பியரான திருஞானசம்பந்த முதலியாருங் கோடீசுவர முதலியாருங் கல்வியிலுந் தமிழ் மக்கள் முன்னேற்றத்திற்கு உழைப்பதிலுஞ் சிறந்து திகழ்கின்றார்கள். பின்னவரான கோடீசுவரர் பி. ஏ., எல். டி. என்னும் ஆங்கிலப் பட்டமும் பெற்றுக் கோவிந்தப்ப நாயகர் கல்விச் சாலைக்குத் தலைமையாசிரியராகவும் அமர்ந்திருக்கின்றார்.

தமது பிள்ளைப் பருவத்தே திருநாவுக்கரசு தம் தந்தையாரால் தமிழ் நூல்கள் கற்பிக்கப்பட்டு வந்ததுடன், ஆங்கிலக் கல்விச் சாலைகளிலுஞ் சேர்ந்து ஆங்கிலமுங் கற்று வந்தார். அக் காலங்களில் இவருக்குக் கல்வி பயிற்றிவந்த ஆசிரியர்களெல்லாரும் இவரது நுட்ப அறிவின் திறனையுங் கல்வி கற்பதில் இவர்க்குள்ள வேட்கையினையுங் கண்டு பெரிது வியந்து இவரைப் பாராட்டி வந்தார்கள் எனவும், தமிழ் ஆங்கிலப் பாடங்கள் எல்லாவற்றிலும் இவர் தம்முடன் பயின்ற உடன் மாணாக்கர் எல்லாரையும் விடத் திறமை மிக்கவராயிருந்தாரெனவும் கேள்வியுறுகின்றோம். ஆங்கிலக்கல்லூரியில் தொடர்பாகக் கலைபயின்று பட்டம் பெறுதற்குத் தக்க செல்வவளம் இன்றி, இவர் சிறு பருவத்திலேயே வறுமைப் பட்டமையாற் பத்தாவது வகுப்புவரையிற் பயின்று, அதன்பின் கல்லூரிப் பயிற்சியை விட்டு நீங்கினார்.

அங்ஙனம் ஆங்கிலப் பயிற்சியை விட நேர்ந்தாலும், தமிழ் நூல் கற்பதில் தமக்குள்ள அவா சிறிதும் நீங்காமல் வரவர வளர்ந்து வந்தமையால் இவர் சென்னையில் திரு. கலியாணசுந்தர அடிகளைச் சார்ந்து தமிழ் நூல்கள் கற்று வந்தார்.

பின்னர் இன்றைக்குச் சிறிதேறக்குறைய 23- ஆண்டுகளுக்கு முன், எம்மாணவர் நாகை. கோபாலக் கிருஷ்ணன் வாயிலாகத் திருநாவுக்கரசு எம்மை வந்து அடுத்தனர். அப்போது யாம் சென்னைக் கிறிஸ்தவ கல்லூரியில் தமிழாசிரியராக இருந்தமையாற் சென்னையிலேயே குடியிருப்புக் கொண்டிருந்தோம்.

கோபாலக்கிருஷ்ணனும் தாமுமாகச் சில நாட்கள் இவர் எம்மை வந்து கண்டுவருகையில், தமிழிலுள்ள பழைய செந்தமிழ் நூல்களை எம்பால் முறையாகக் கற்கவேண்டுமென்னுந் தமது விருப்பத்தைக் கோபாலக்கிருஷ்ணன் வாயிலாக எமக்கு மெல்லெனப் புலப்படுத்தினார். அது தெரிந்து யாம் "ஆங்கிலங்கற்கின்ற மாணவர் தமிழ் நூல்களை மிகுதியுங் கற்பாராயின், தமிழ் நூற்சுவை ஆங்கில நூற்பயிற்சியைத் தடைசெய்யும்; ஆதலால், ஆங்கிலத்தை மிகுதியாகவுந் தமிழைச் சிறிதாகவும் பயின்று, ஆங்கிலப் புலமையை முற்றுவித்துக்கொண்ட பின் தமிழை மிகக் கற்றலே வேண்டற்பாலது". என்றோம். அதன்மேல், இவர் ஆங்கிலம் நீளப்பயிலுதற்கு ஏற்ற வசதிகள் பயவாத தமது வறிய நிலைமையினையும், தமிழ் கற்றாவது அறிவு பெறவேண்டுமெனத் தமக்குள் அடங்காது எழும் அவாவினையும் எமக்குத் தெரிவித்தனர். இவர் அவைகளைத் தெரிவித்த முறையானது, எமது நெஞ்சத்தை இளகச் செய்து, அப்போதே இவர் பால் எமக்கு மிக்க அன்பினைத் தோற்றுவித்தது. இவர் வேண்டுகோளுக்கும் இசையலானேம். அது முதல் இவருங் கோபாலகிருஷ்ணனும் ஒருங்கு சேர்ந்து, 'திருமுருகாற்றுப்படை'யும் 'நன்னூலும்' துவங்கி அவையும் பிறவும் ஒழுங்காக எம்பாற் பாடங்கேட்டு வரலாயினர்.

இருவரும் நுண்ணறிவுடையாராகக் காணப்படினுங், கோபாலகிருஷ்ணனுக்கு எழுதும் ஆற்றலே மிகுதியாயுள தென்பதும், திருநாவுக்கரசுக்கு எழுதும் ஆற்றலொடு பேசும் ஆற்றலும் ஒப்பஉளதென்பதும், அப்போதே புலப்படலாயின. இவ்விருவர்க்கும் உள்ள அவ்வேற்றியல்பு, இவர்கள் வளர்ந்து பெரியரான பின்றான் வெள்ளிடைமலைபோல் விளங்கலாயிற்று. கோபாலகிருஷ்ணன் பொருள் பொதிந்த இனிய செந்தமிழ்க் கட்டுரைகள் எழுதுவதிலும், புதிய கதைகள் அமைப்பதிலும் மிக்கு விளங்கினர். ஆனால், அவைக் களங்களிற் கேட்போர் கருத்தை இழுக்கத்தக்க சொற்பொழிவு நிகழ்த்தும் ஆற்றல் அவர்க்கு வாய்த்திலது. மற்றுத் திருநாவுக்கரசுக்கோ, கட்டிளமைக் காலத்தே கட்டுரைகள் கதைநூல்கள் எழுதுவதிற் கருத்துச் சென்றிலதாயினும், அவைகளிற் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதில் இவர்தம் அறிவும் ஆற்றலும் ஈடுபட்டிருந்தன. அக்காலத்திலேயே இவருடைய சொற்பொழிவுகளைக் கேட்பவர், இவரை மிகவும் கொண்டாடிப் பேசினர். ஒரு பொருளை எடுத்து விரித்துப் பேசுங்காற், கேட்பவரது கருத்து மகிழ்ந்து அதிற் பதியுமாறு நகைச்சுவை தோன்றப் பேசுந் திறம் இவர்க்கு வாய்ந்தாற்போற் பிறர்க்கு வாய்ப்பது அரிது. நகைச்சுவை மட்டும் தோன்றப் பேசுவார் பலர் உளர். ஆனால் அவரது உரையில் அறிந்து நினைவு கூரத்தக்க அரும்பொருள் அமையா. மற்றத்திருநாவுக்கரசு நிகழ்த்தும் உரையிலோ, நகைச் சுவையோடு பொருட் சுவையும் அமைந்திருந்தது. இன்னும், நகைச்சுவையில்லாமல், உயர்ந்த துறைகளைப் பற்றிப் பேசுங்கால் கேட்பார்க்குச் சலிப்பும் உவர்ப்பும் தோன்றாமல் அவர்களது கருத்தை அவற்றின்பாற் பதியவைக்கும் முறையில் அவை தம்மை அழகு படுத்திப் பேசும் வல்லமையும் இவர்க்கிருந்தது. இங்ஙனம் "எண்பொருளவாகச் செலச் சொல்லுஞ்" சொல்வன்மை இவரது இளம் பருவம் முதல் இவர் இறந்துபடுங் காலம் வரையிற் குன்றாதிருந்தது.

இங்ஙனஞ் சொற்பொழிவுகள் நிகழ்த்தும் வகையில் இவர் தமக்கிருந்த அறிவாற்றலைச் சிறுபருவ முதலே நூலெழுதுந் துறையில் செலுத்தி யிருந்தனராயிற் சைவத்திற்குந் தமிழுக்கும் நிலையான பயனைத் தரத்தக்க பல அருந்தமிழ் நூல்களை இவர் இயற்றியிருக்கலாம். அதைப் பற்றி இவர்க்கு யாம் பலகால் வற்புறுத்திச் சொல்லியும், அதில் இவர்க்குக் கருத்துச் செல்லவில்லை. சிறு பருவத்தில் இவருக்கிருந்த வறுமையானது புராணப் பிரசங்கஞ் செய்யும்படி இவரைத் தூண்டியது. அதனால் வந்த வருவாய் இவரது இளம்பருவ வாழ்க்கைக்கு உதவி செய்தது.

பின்னர் இவர் கல்விச் சாலைகளில் தமிழாசிரியராய் அமர்ந்து, தமது வாழ்க்கையை இயன்ற வரையில் வறுமையின்றிச் செலுத்திக்கொள்ள வாய்த்தது முதற்றான், கட்டுரைகள் எழுதும் பழக்கத்தையுங் கைக்கொள்ளலானார். தமது குடும்பச் சுமை முற்றும் இவரே தாங்க வேண்டி யிருந்தமையாலும், அச் சுமையை எளிதாக்குதற் கேற்ற செல்வ வளம் இல்லாமையாலும், குடும்ப வாழ்க்கையை இனிதாக்குதற்கு வேண்டும் பொருள் வருவாயை நோக்கியே, இவர் திங்கள் இதழ் கிழமை இதழ், நாளிதழ்கட்குக் கட்டுரை யெழுதவும் பள்ளிக்கூடங்கட்குப் பாடப் புத்தகங்கள் இயற்றவும் வேண்டியவராயினார். பொருள் வருவாயை நோக்கி எழுதப்படும் எதுவும் பெரும்பாலும் நிலையான பயனைத் தரத்தக்க தாகாது. இதனை நமது தமிழ்நாட்டுச் செல்வர்கள் உணர்ந்து பார்த்து, நூல் எழுதும் ஆற்றல் வாய்ந்த தமிழறிஞர்க்கு வறுமை தீரப் பொருளுதவி செய்திருப்பார்களாயின், இதுகாறும் எத்தனையோ அருந்தமிழ் நூல்கள் பேரறிஞர்களால் எழுதப்பட்டு வெளிவந்திருக்கும். ஆனால், அச் செல்வர்கள் தமது பெரும் பொருளைப் பயனற்ற தீவினையைப் பெருக்கத் தக்க ஆரவாரமான வழிகளிற் பாழாக்குகின்றனரேயன்றித், தமிழ் மொழியை வளம்படுத்தி வளர்க்குந் துறைகளிற் சிறிதும் பயன் படுத்துகின்றிலர்; மேல் நாட்டவரிற் கற்றவர் தொகையும், அக் கற்றவரால்

அரும்பெரும்பொருள் பொதிந்து இயற்றி வெளியிடப் படும் நூல்களின் தொகையும் நாடோறும் பதினுயிரக் கணக்காய்ப் பெருகி வருதலையும், தமிழ் நாட்டவரின் நன்கு கற்ற மிகச் சிலரின் தொகையும் வறுமையால் நாளுக்கு நாள் அருகி வருதலையும் ஒப்பிட்டு எண்ணிப் பார்க்குங்கால், இத் தமிழ் நாட்டவர் எந்த வகையில் முன்னேற்றம் அடையப் போகின்றுர்கள் என்னுந் திகில் பெரிதாயிருக்கின்றது; நகைக்குந் துணிக்கும் வீணை வெளிமினுக்குகளுக்கும் வெற்ருரவாரங்களுக் கும் இத்தமிழ் நாட்டிற் கணக்கின்றிச் செலவாகும் பொருளையுங், கல்விக்குங் கைத்தொழிலுக்கும் புதிய ஆராய்ச்சிகளுக்கும் சமய அறிவு வளர்ச்சிக்கும் பயன்படுத்தப்படும் பொருளையும் ஒப்பிட்டு எண் ணிப் பார்க்குங்கால், இந்நாட்டவர் மேல்நாட்டவரோடு ஒப்ப நாகரிக இன்ப அறிவு வாழ்க்கையைப் பெறுதல் கனவிலும் கைகூடுமோ என்று வருந்தி ஏங்க வேண்டி யதாயிருக்கின்றது! இந்நாட்டில் வீணைச் செலவழி யும் பெரும்பொருட்டிரள் நூறுகோடியில் ஒரு சிறு பங்காயினுந் தமிழ் கற்ருர்க்குப் பயன் படுமாறு வைக் கப்படுமானுல், நம் திருநாவுக்கரசை யொத்த எத்தனை யோ தமிழ்ப் புலவர்கள் தமிழறிவிற் சிறந்து, எத்தனை யோ அரும்பெருந் தமிழ் நூல்களை இயற்றி வெளியிட் டிருப்பார்கள்; திருநாவுக்கரசும் இவரைப் போன்ற வேறு சிலரும் அரிய பெரிய தமிழ் நூல்கள் எழுதா மைக்குக் காரணம், அவரது வாழ்க்கை இனிது நடத் தற்குப் போதுமான பொருள் வருவாய் இல்லாமையே யன்றே? ஐயகோ! தமிழறிஞர்க்குள்ள வறுமை என் ருன்று எங்ஙனம் நீங்கப் போகின்றது! நம் அருமைக் கண்மணிகளாம் தமிழினைஞர் சிலரையும் நாம் இங் ஙனம் விரைவில் இழக்க நேர்வது பெரும்பாலும் அவர்க்குள்ள குடும்பக் கவலையினுலன்றே? இது நிற்க.

இனி இவருடைய அறிவு ஆராய்ச்சி நல்லியல்புகளைப் பற்றிச் சிறிது கூறல் வேண்டும்; இவர் இயற்கையிலே யே கூர்த்த அறிவுடையவர்; தாம் ஒன்று கற்ருற் பின் னர் அதனை நூருகப் பெருக்கி விடுவர்; அதனைப் பிறர்க்கு விளக்கிச் சொல்லுவதிலும் வல்லவர்; அங்ங னம் விளக்குதற்கு வேண்டிய பலவற்றைப் பல துறை களிலிருந்தும் புதியவாக எடுத்துச் சேர்த்துக் கொள் வர். குடும்பச் சுமையும் மிகுதியான செலவும் இவற் றின் பொருட்டு ஓயாமற் பொருளீட்டும் முயற்சியும் இல்லாதிருந்தால், உணவை ஒழுங்குபடுத்தி, நோய்க்கு இடமானவைகளை விலக்கித் தமதறிவையும் முயற்சி யையும் ஒருமுகப்படுத்தியிருந்தால், தமிழிலும் ஆங்கி லத்திலும் உள்ள இன்னும் எத்தனையோ அரும்பெரு நூல்களை யெல்லாம் ஆழமாகப் பயின்று, அப் பயிற்சி யாலாகிய பெரும்பயனை இவர் இத்தமிழுலகிற்குத் தந்திருக்கலாம். ஆழ்ந்தகன்ற நூல்களைப் பயின்று அவற்றின் பொருள்களைப் பயன்படுத்தத்தக்க அத் துணைச் சிறந்த இயற்கை யறிவு இவர்க்கு அமைந்திருந் தது. ஆனுல், அது பயன்றராமல் இத்துணை விரைவில் மறைந்து போயிற்றே!

இவர் எம்பாற் கல்வி பயின்று வெளியேறிச் சொற் பொழிவுகள் நிகழ்த்துகின்ற காலையில், இவரது அறி வானது ஆராய்ச்சி முறையிற் சென்று, தாம் கற்றவற் றிற் பொருந்துவன இவை, பொருந்தாதன இவை எனக் காணும் நீர்மையதாயிருக்கவில்லை. தம் முன்னுசிரிய ராகிய கலியாணசுந்தர அடிகள் கொண்டிருந்த ஆரியப் பற்றிலேயே இவர்க்குப் படிமானம் மிகுதியாயிருந்தது. எம்முடைய ஆராய்ச்சித் துறைகளினும், யாம் ஆராய்ந்து கட்டிய முடிபுகளிலும் நீண்ட காலம் வரையிற் பிடிமானம் இல்லாமலே இருந்தார். ஆசிரியர் மெய்கண்ட தேவர் அருளிச் செய்த 'சிவஞானபோதம்' தமிழ் முதல் நூலேயன்றி வடமொழியிலிருந்து மொழி பெயர்த்துச் செய்ததன்று என யாம் ஆராய்ந்துரைத்த முடிபைத் தழுவாமல், அது மொழிபெயர்ப்பு நூலே யென்று எழுதியும் பேசியும் வந்தார். எழுதும்போதும் பேசும்போதும் தமிழ் மொழியைப் பிறசொல் கலப் பின்றி தனித் தூய தமிழாகவே வழங்க வேண்டுமென்று யாம் வற்புறுத்தி வருங் கொள்கையில் நீண்ட காலம் வரையில் உடம்பாடில்லாமலே யிருந்தார். 'வேதம்' என் றும் 'ஆகமம்' என்றும் வடமொழியில் வழங்கும் நூல் கள் இறைவன் அருளிச் செய்தன வல்ல என்று யாம் ஆராய்ந்துரைத்த முடிபிற் கருத்தொருப்பாடில்லாம லே யிருந்தார். இன்னும் இங்ஙனமே நூலாராய்ச்சித் துறைகளினுஞ் சீர்திருத்த முறைகளிலும் யாம் ஆராய்ந்து கொண்ட கோட்பாடுகளில் இவர் உடன் பாடுடையாராய் நில்லாமற் றம்முன்னுசிரியராகிய கலி யாண சுந்தர அடிகள் சென்ற வழியே சென்றுர்.

என்ருலும், இவர் எம்மிடத்து வைத்த பேரன்பிலும் பெரும் பாராட்டிலும் சிறிதும் பிறழ்ந்தவர் அல்லர். அதனுல் எமக்கும் இவர்பாலுள்ள அன்பு சிறிதும் பிறழ்ந்திலது. கருத்து வேறுபாடு பற்றி அன்பு சிதை யாமலும் பகைமை கொள்ளாமலும் எம்மோடு என்றும் ஒரு நீர்மையராய் ஒழுகிய இவரது சிறந்த உள்ளமேம் பாடானது, கருத்து வேற்றுமை குறித்து அன்பின்றி ஒருவரை யொருவர் பகைக்குந் தமிழ்ப் புலவர்க்கும் பிறர்க்கும் அறிவு தெருட்டும் அருமணி விளக்கமாய் நிற்கற்பாலது.

யாம் சென்ற ஆராய்ச்சித் துறையினுஞ் சீர்திருத்த முறையினும் இவர் முன்னமே எம்மோடு ஒத்து நின்று உதவி புரிந்தனராயின், இத்தமிழ் நாட்டில் இன்னும் எவ்வளவோ நலங்கள் விளைந்திருக்கும். எம் சைவ சமயாசிரியர் தமிழாசிரியர்களுக்கு வைத்த சீர்திருத் தங்களையே யாம் இருபத்தைந்தாண்டுகளுக்கு முன்ன

மேதொட்டு எம்முடைய நூல்களாலும் எம்முடைய விரிவுரைகளாலும் ஆங்காங்கு விளக்கி வருகின்றேம். இற்றைக்கு மூன்றாண்டுகளுக்கு முன் புதிது தோன்றிய சீர்த்திருத்தக்காரரது இயக்கமானது எம்முடைய கோட்பாடுகளையே தழுவி யெழுந்ததாயினும், இடைக் காலத்தே எம் சைவ ஆசிரியர்க்கு மாருய்த் திரும்பிச் சைவ சித்தாந்தத்துக்கு உடம்பாடாகாத "பௌராணிக சைவர்" தம் பொருந்தாக் கூற்றுகளை எடுத்துக் கொண்டு சிவபிரானையுஞ் சிவனடியார்களையும் தமக்குத் தோன்றியவாறெல்லாம் இழித்துப் பேசுவதாயிற்று. அவ்வாறு சைவ சித்தாந்தத்தின்மேல் ஏற்றப்பட்ட பழிகளைக் களைந்து, சைவசித்தாந்த உண்மையினை நாட்டி, அப்புதிய இயக்கத்தாருடன் யாம் போராடிய காலத்தும் யாம் தனி நின்றே அதனைச் செய்யு நிலையி லிருந்தோம். புதிய இயக்கத்தார் நிகழ்த்தும் தடைகட்கு விடை கூறமாட்டாத பௌராணிக சைவர் அவரை யெதிர்ப்பது விடுத்துச் சைவ சித்தாந்த உண்மையினை நாட்டும் எம்மையே எதிர்க்கலாயினர். ஒரு பக்கத்திற் புதிய இயக்கத்தாரும் மற்றொரு பக்கத்திற் பௌராணிக சைவருந் தாக்க, அந்நேரத்தில் யாம் சிவபிரான் றுணையொன்றே கொண்டு, அவ்விருவர்க்கும் ஈடு கொடுத்துச் சைவ சித்தாந்த உண்மையினைத் தனி நின்றே நாட்டும் நிலையினம் ஆனேம். அந்நேரத்தில் நம் அருமைத் திருநாவுக்கரசு நம்முடன் சேர்ந்து நின்று சமயத் தொண்டு செய்திருந்தனராயின் இன்னும் எவ்வளவோ நலங்கள் விளைந்திருக்கும்.

ஆனாலும், அப்போராட்டம் துவங்கிய இரண்டோராண்டுக்குப்பிற் சடுதியில் திருநாவுக்கரசின்பாற் றோன்றிய ஒரு முழுமாறுதலானது எமக்குப் பெரு வியப்பினையும் பெருமகிழ்ச்சியினையும் பயந்தது. பழங் கொள்கையையே விடாப்பிடியாய்க் கொண்ட புதிய இயக்கமும் அவர்க்குப் பழுதாகத் தோன்றலாயிற்று; முழுமுதற் கடவுளான எல்லாம் வல்ல சிவத்தினிலக் கணத்துக்கும், அதனை அறிவுறுத்துஞ் சைவசித்தாந்தத் துக்கும், அதனைத் தனக்கேயுடைய தெய்வத் தமிழுக்குஞ், சைவ ஆசிரியர் மேற்கொண்ட சீர்த்திருத்தத் துறைகட்கும் முற்றும் முரணான பௌராணிக சைவக் கோட்பாடும் அவர்க்குப் பழுதாகத் தோன்றலாயிற்று. இங்ஙனந் தோன்றிய பின்னர்த்தான் ஆராய்ச்சி முறையிற் செல்லும் எமது தமிழ்த் தொண்டு சிவத் தொண்டு சிறந்தனவாகுமெனத் திருநாவுக்கரசு நன்கறிந்து, அதுமுதல் எம்முடைய கோட்பாடுகளையே முற்றுந் தழுவி நடக்கக் கங்கணம் கட்டினர். எமது திருத்தொண்டினல் இத்தமிழகத்துக்கு விளையும் நலங்களைப் பகுத்துணர்ந்து பாராமையாற் பௌராணிக சைவரிற் பலர் எம்மைப் புறங்கூவுவராய்ச் சிறிதுந் திருந்தா திருக்க, நம் அருமைத் திருநாவுக்கரசு உடனே எம் வழிக்குத் திரும்பிப், பழமையை யொட்டிய சீர்த்திருத்தத் துறையில் இறங்கியது பெரிதும் பாராட்டற்பாலதொன்று யிருந்தது. சென்ற தைத் திங்கள் பூச நாளன்று பல்லாவரத்திற் கூடிய எமது பொதுநிலைக் கழக இருபதாம் ஆண்டு விழாப் பேரவைக்குத், திருநாவுக்கரசு பல வகையில் உதவி செய்ததுடன், பௌராணிக சைவர் பெரிதும் வெருக்கொளத்தக்க மிக உயர்ந்த சீர்திருத்தங்களையும் அஞ்சா ஆண்மையுடன் கொணர்ந்து, எமதும் அவையாரதும் முழு உடன்பாடு பெற்று அவைதம்மை நன்கு நிறைவேற்றி வைத்தார். இவர் இத்துணை அஞ்சா ஆண்மையினராய்த் தமிழ் மக்கள் ஆக்கத்தைக்கோரி உழைக்க முன் வந்ததானது எமக்கு அடங்கா மகிழ்ச்சியினை விளைவித்தது. ஆனாலும், இவர் தமது உணவினை ஒழுங்கு படுத்தாமலும், உடலோம்புந் தவவொழுக்க முறைகளைக் கைக்கொள்ளாமலும் இத்துணை விரைவில் தமதுடம்பை நீத்து ஏகியது நினைக்குந் தோறும் பெருந்துயரத்தைத் தருகின்றதே! ஆ! ஊழ்வினையின் வலிவை என்னென்பேம்.

இனி, இவர்தம் நல்லியல்புகளைப் பற்றிச் சிறிது கூறல் வேண்டும். எவரும் தாம் நல்லதொன்று செய்தால் அதனை எங்கும் பறையறைந்தாலென வெளிப்படுத்துவர்; நல்லதல்லாதது செய்தால் அதனைத் தமக்குற்றார்க்குந் தெரிவியார். தாம் நல்லதல்லாதது ஏதேனுஞ் செய்திருந்தால் எம்மிடம் அதனைத் தெரிவியாதிரார். பிறர்க்குத் துன்பத்தை விளைவிக்கத் தக்க பொய் இவர் வாயில் வருவதில்லை. மனநலன் நன்கு வாய்ந்தாரை யன்றி, ஏனையோரை இவர் ஒரு பொருட்படுத்தார். வெளி மினுக்குப்பட்ட ஆரவாரங்களும் இவரை மருட்டமாட்டா வாயின.

மிக இளைஞராயிருந்த காலந்தொட்டே இவர் எம் அறிவுரைகளைப் பெரும்பாலும் ஏற்று ஒழுகும் இயல்பினரா யிருந்தார். நெடுங்காலத்திற்கு முன் ஒரு கால் இவர் ஆரவாரமான பட்டங்கள் சூட்டிக் கொள்வதில் அவாவுடையராய், அவ்வாறு தாம் புனைந்துகொண்ட பட்டங்கள் பதித்த தாள் ஒன்றை எம்பாற் கொணர்ந்து காட்டினர். அது கண்டு யாம், "நம் மக்கள் முன்னேற்றத்திற்குஞ் சிவபிரான் றிருவடிக்கும் நாம் இயற்றுந் தொண்டு அவ்வுண்மையை நோக்கியதாய் இருக்க வேண்டுமேயல்லாமல், ஆரவாரமான பட்டங்கள் சூட்டிக் கொள்வதற்கென்று நடைபெறல் கூடாது. வேண்டுமாயின் நீ தமிழாசிரியராய் வேலை பார்க்கும் நிலையைச் சுட்டிப் 'பண்டிதர்' தமிழாசிரியர், என்பவைகளை மட்டும் நின்பெயரோடு சேர்த்து வழங்கலாம்" என்றேம். அது முதல் இவர் வெளி யாரவாரமான பட்டங்கள் புனைந்து கொள்வதை அறவே விடுத்தார்.

பின்னும், இவர் இளைஞராயிருந்தபோது தமிழிற் பாட்டுகள் கட்டுவதில் மிக்க சுருசுருப்புடையரா யிருந்தார். ஒரு கால் யாம் இவரை நோக்கி "நமது தமிழ் மொழியிற் கோடிக்கணக்கான பாட்டுகள் பாடப் பட்டிருக்கின்றன. ஆனல், உரை நூல்களோ சிலவும் இல்லை. பொது மக்கட்கு இனி உரை நூல்களே வேண் டும். ஆதலால் நீ பாட்டுப் பாடுவதை விடுத்து உரை எழுதுவதிலேயே பழகல் வேண்டும்" என்றேம். அது முதல் இவர் பாட்டுப் பாடுதலை விடுத்து, உரை எழுது தலில் திரும்பினர். இங்ஙனமே இவர் தமது இளமைக் காலத்தே எம் அறிவுரைகளைக் கேட்டு அவற்றின்படி நடந்த வகைகள் பல. ஆசிரியர் கூறும் அறிவுரையை ஏற்று நடவாத இஞ்ஞான்றை மாணவர்க்குத், திருநா வுக்கரசின் அரிய நடை நல் விளக்கா ஒளிரற்பாலது.

இனி இவர் தம் கருத்துக்கு மாறுனவரிடத்தும் பகை மையின்றி அன்பினுல் அளவளாவும் இயல்பினரென் பதை முன்னரே எடுத்துச் சொன்னேம். இவ்வருங் குணம் எல்லார்க்கும் வாய்ப்பதன்று. கல்வியறிவு வாய்ந்த நம்மனோர் எல்லாரும் இந்நல்லியல்பின் விருப் பத்தை நன்குணர்ந்து என்றைக்கு அதனை யுடையராய் ஒழுகத் தலைப்படுகின்றனரோ அன்று முதற்றான் நம் நாடு செழிப்புறும். நம் அருமைத் திருநாவுக்கரசின் இந்நல்லியல்பும் நம் தமிழறிஞர்க்கும் பிறர்க்கும் ஓர் எடுத்துக்காட்டாக நிற்கற்பாலதாகும்.

இனி, இவர் தமது சிற்றிளமைப் பருவந் தொட்டே தமது வருத்தத்தையும் பாராமற் பிறர்க்குதவி செய்யும் இரக்க நெஞ்சமும் நல்லெண்ணமும் உடையர். இவர் எம்பாற் கல்வி பயின்று கொண்டிருந்த அந்நாளில் ஒரு போது எம் மூத்த மகள் மிகக் கொடிய காய்ச்சலாற் பற்றப்பட்டு உணர்விழந்து கிடந்தாள். யாங்கள் எல் லோரும் பெருந்திகிலும் பெருங் கவலையுங் கொண்டு அம்மகளுக்கு வந்த அந்நோய் தீர்க்கத்தக்க மருத்து வரை ஒருவர் பின் ஒருவராய் வைத்துப் பார்த்து வந் தோம். அவ்வுற்ற நேரத்தில் நாகைக் கோபால கிருஷ்ண னும் நம் அருமைத் திருநாவுக்கரசும் அல்லும் பகலும் எம்மை யகலாதிருந்து பல வகை உதவிகளும் செய்து வந்தார்கள். நோயானது மிக முறுகிப் பேரிடர் பயப்ப தாய் நின்ற ஒரு நாளிரவில், இவ்விருவருஞ் சென்று வேறோர் ஆங்கில மருத்துவரை அழைத்து வந்தனர். அப்போது இரவு மணி பதினொன்றுக்கு மேல் இருக்கும். வந்த அம் மருத்துவர் தக்க மருந்து கொடுத்து, வேறு சில நுட்ப முறைகளுஞ் செய்து, கடைசியாகப் பாலிற் கலந்து கொடுக்கப்பனிக்கட்டிகள் வேண்டும் என்றார். அஞ்ஞான்றும் யாம் சென்னையில் மண்டிக்கு அருகி லுள்ள அரமனைக்காரன் தெருவில் ஒரு வீட்டின் மேன் மாளிகையிற் குடியிருந்தோம். யாம் இருந்த அப்பகுதி யில் அந்நேரத்தில் எங்கும் பனிக்கட்டிகள் கிடைக்க வில்லை. அதன் மேல் திருநாவுக்கரசு எப்படியாவது அவற்றைக் கொண்டுவருதற்கெண்ணி, எழும்பூருக்கு அருகிற் பனிக்கட்டி செய்யுந் தொழிற்சாலைக்கே போகப் புறப்பட்டார். கோபால கிருஷ்ணனும் அவருடன் சென்றார். மின்சார வண்டியாவது குதிரை வண்டி, மாட்டு வண்டிகளாவது அந்நேரத்தில் கிடையா மையால் அவர்கள் அந்நள்ளிரவில் கால் நடையாகவே செல்ல வேண்டியதாயிற்று. யாமிருந்த இடத்திற்கும் பனிக்கட்டித் தொழிற் சாலைக்குஞ் சிறிதேறக்குறைய மூன்று மைல் இருக்கும். இவர்கள் அன்றிரவு செய்த அச்செயற்கரிய உதவியால் எம்மகள் நோய் நீங்கி உயிர் பிழைத்தாள். இங்ஙனம் உற்ற நேரத்தில் எவ்வகை இடைஞ்சலுக்கும் அஞ்சாது நின்று தம்பாலன்புடை யார்க்கு உதவி செய்யும் விழுமிய நல்லியல்பு இவர்தம் இறுதி நாளளவும் இவர்க்கிருந்தது. யாம் சென்னையி லிருந்த காலமெல்லாம் யாமும் எம்மைச் சார்ந்தாரும் அடுத்தடுத்துக் குளிர் காய்ச்சலாற் பற்றப்பட்டு வருந் தாநின்றேம். இதனைக் கண்ட திருநாவுக்கரசு சென் னைக் குடியிருப்புத் தங்களெல்லார்க்கும் சிறிதும் இசை யாததாயிருக்கின்றது. உடல்நலமனநலங்களுக்கு இசைந்த பல்லாவரமே தங்களெல்லார்க்கும் பொருந்து வதாகும்" என்று அடிக்கடி வற்புறுத்திச் சொல்லி எம் மை 1911ம் ஆண்டிற் பல்லாவரத்திற் குடியேற்றி வைத்து உதவி செய்தார்.

இங்ஙனம் பலவகையாலுஞ் சிறந்த தவப்பிறவியின ரான நம் அருமைத் திருநாவுக்கரசு நம்மனோரை யெல் லாம் இத்துணை விரைவில் விட்டு நீங்கியதான பெருங் குறை இத்தமிழுலகத்துக்கு எளிதிற் றீருமோ! எல்லாம் வல்ல சிவபிரான் இவரது சிறந்த உயிருக்கு மறுமை யுலகில் நீண்டகாலம் ஆறுதலைத் தந்தருளி, அதன் பின் இவர் மீண்டும் நம்மிடையே எல்லா வசதிகளோடும் பிறந்து, தாம் அரைகுறையாய் விட்டுச் சென்ற தமிழ்த் தொண்டு சிவத்தொண்டுகளை நன்கினிது முடித்து அதன்மேற் பிறவியெடாராய்ச் சிவபிரான் றிருவடி நிழ லில் வைகிப் பேரின்பம் நுகர்ந்திருப்பாராக வென அப் பெருமான் திருவடிப் போதுகளை இறைஞ்சி வேண்டு கின்றேம். இவர் தம் முதன் மனைவிக்குப் பிறந்த ஒரு புதல்வன் உளன். முதன் மனைவி காலமான பின் மணந்துகொண்ட இவர்தம் இரண்டாம் மனைவிக்கு ஐந்து பெண்பிள்ளைகள் உளர். இவர் தம்பியர் இருவர் உளர். இவர் தந்தையார் ஆண்டில் மிக முதியராயிருக் கின்றார். சென்னையில் நம் திருநாவுக்கரசிடம் தமிழ்க் கல்வி பயின்ற இவர்தம் மாணாக்கர் பலர் உளர். அவருட் பாரிப்பாக்கம் திருக் கண்ணப்ப முதலியாரும், சென்னை முத்தியால்பேட்டை உயர்தரக் கல்விச்சாலைத் தமிழாசிரியர் மயிலைத் திரு. முத்துக்குமாரசாமி முதலி யாருந் தமிழறிவிற் சிறந்தவர்களாய்த் திகழ்கின்றார்கள்.

(செந்தமிழ்ச் செல்வி ஒன்பதாஞ் சிலம்பு.)

கவிதை

# சோலைக்குயில்

"சோதி"

1. முன்னுங் கேட்டேன் உன்றனிசை
முழுதுங் காணும் வேட்கையினுல்
பின்னுங் கேட்டேன் ஒகுயிலே !
பெரிதும் உவந்து களிப்புற்றேன்
வன்ன நிறத்துப் புள்ளென்றே
வானி னிசைக்கும் ஒலியென்றே
உன்னை யழைத்த லெவ்வாறே
உரையாய் என்னிற் புதியோனே !

2. கானந் தருமுன் னடுக்கினெலி
கண்ணி னிடத்தும் சேய்மையினும்
வானி னுயிர்ந்த மலைமிசையும்
வாவி மருங்கும் பிறவிடத்தும்
தானம் பெயர்ந்தே தாவுதலைத்
தரையில் இருந்தே கேட்கின்றேன்
வரனங் குளிர்ந்து வருமோசை
வையம் உவகை கொள்ளாதோ !

3. கண்ணுக் கினிய மலர்நிறைந்தும்
கற்றைக் கதிரின் கவினுறைந்தும்
மண்ணிற் காணும் மலையிடத்தே
வடிந்து தோன்றும் நிலத்தினுக்கு
எண்ணத் தருமுன் னெலியோசை
இன்பந் தாரா விட்டாலும்
கண்ணிற் புதிது புதிதாகக்
கதைகள் எமக்குக் காட்டுபவே !

4. வேனிற் கால விருந்தேநின்
மெய்யாம் நிலையை நினைகின்றேன்
கானிற் றிரியும் பறவையல்லை
காவில் நுழையும் ஒலியல்லை
பேணத் தகுமோர் பொருளெனவும்
பிறகு மறியாப் பொருளெனவும்
நாணி நின்றே நானுரைப்பேன்
நன்றி பலவும் செலுத்துகிறேன்

5. பள்ளிக் கால நாட்களிலே
பலவாய்க் கேட்டு உன்னெலியைத்
துள்ளிப் பிடிப்பேன் என்றெழுந்து
துணிந்த நாட்கள் எத்தனையோ
கள்ளத் தனமாய் நீயெனக்குக்
காணு விடத்தும் நானுன்னை
அள்ளிப் பருகும் பொருளென்றே
அன்போ டிருந்து கூறுவனே !

6. காவிற் றவழ்ந்து வருமோசை
காது குளிருங் கானமெனப்
பாவித் திருந்தே நிலமிசையே
பலநாட் கேட்க விரும்புகின்றேன்
பூவிற் பொலியும் பொன்போன்ற
புதிய பருவம் வருமளவும்
கூவிக் கேட்கும் உன்றனெலி
கொள்ளா திருந்துங் குறையாதே !

7. வையங் கடந்த பெருவாழ்வில்
உய்யு மின்பம் வருமேனும்
ஐயந் தருவ அவைநில்லா
அவனி வாழ்க்கை இவ்வண்ணம்
நைவொன் றில்லாய் உனக்கிதுவே
நன்கி தான மனையாகும்
தெய்வம் வதியும் உலகாகும்
செம்மாந் திருக்க வாய்த்ததுவே

*இஃது ஆங்கிலக்கவி "உவேட்ஸ் வேர்த்" எழுதிய குயிற்பாடலைத் தழுவி எழுதியது.

---

# கல்விப் பகுதி அறிக்கை

(1) எங்கள் பாடசாலைகளில் ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகக் கற்பிப்பதன் நோக்கம் பற்றியும் ;

(2) ஆங்கிலம் ஒரு கட்டாய பாடமாக இருக்க வேண்டுமா என்பதையிட்டும் ;

(3) ஆங்கிலப் போதனை எந்தக் கட்டத்தில் ஆரம்பமாக வேண்டுமென்பதைப்பற்றியும் ;

(4) ஆங்கிலத்தை ஓர் இரண்டாவது மொழியாகக் கற்பிப்பதில் பின்பற்ற வேண்டிய முறைகளையிட்டும் ;

(5) இந்நோக்கத்துக்கெனத் தற்போது கிடைக்கத் தக்கனவாயுள்ள பாடப்புத்தகங்கள் போதுமானவையா ; இல்லையெனின் அந்தக் குறைபாட்டை நிவிர்த்திக்க என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைப் பற்றியும் ;

(6) ஆங்கிலம் கற்பிப்பதற்கேற்ற ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதையும் வழங்குவதையுமிட்டும் ;

(7) எங்கள் பாடசாலைகளில் ஆங்கிலம் போதிக்கும் விஷயத்தில் ஒரு உயர்ந்த தரத்தை நிலைநாட்டுதற்கு அத்தியாவசியமான சகல நடவடிக்கைகள் பற்றியும் ;

(31ம் பக்கம் பார்க்க)

# ஈழத்தில் இயற்றப்பெற்ற நாடகங்கள்

பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தர்,

இயற்றமிழிலாக, இசைத்தமிழிலாக, நாடகத்தமிழிலாக எங்கள் ஈழநாடு பண்டைக்காலத்தில், அயல்நாடாகிய தென்னிந்தியாவோடு ஒத்து விருத்தியடைந்து வந்ததென்பதற்குப் பல ஆதாரங்களுள. முற்காலத்தில், இராசராச பாண்டியனுடைய காமக்கிழத்திகளிலொருத்தி, இசையில் வல்லவள், அக்காலத்து விளங்கிய சிவபக்தராகிய பாணபத்திரருடைய மனைவி தன்னைக்காட்டிலும் இசையிலே சிறந்துள்ளாள் என்பதை உணர்ந்து, மனம்பொறுளாய் அவ்விறலியை வேறுயாரைக்கொண்டேனும் வெல்லுவிக்கவேண்டும் என்னும் நோக்கங்கொண்டு, அந்நோக்கத்தைத் தன் காதலனுகிய இராசராசபாண்டியனிடம் பன்னினுள். அப்பொழுது :

"தோடிறப் பொரு கயற்கணினுல் தான் சொன்ன வாறெழுகு மன்னர் மன்னன்—நாடியத்தகைய விறலியை **ஈழநாட்டினும்** வரவழைத்து விடுத்தான்"

எனப்பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணத்திற் சொல்லப்படுகின்றது, அதாவது அழகிற்சிறந்த அந்தக்காமக்கிழத்தியின் சொற்கேட்டு நடக்கும் இராசராசபாண்டியன், பாணபத்திரன் மனைவியாரை இசையில் வெல்லத்தக்க பாடினியை நாடெங்குந்தேடி அகப்படாதொழிய, ஈற்றில் இந்த ஈழநாட்டிலிருந்தவள் ஒருத்தியே இசையில் நிபுணை எனக்கண்டு இவளைத்தன் மாளிகைக்கு அழைப்பித்தானும். விறலியாரைக்காட்டிலும் இவள் இசையில் வல்லவளாய் இருந்தாளெனினும், திருவாலவாய்ப்பெருமான் திருவருள்கொண்டு பாணபத்திரன் மனைவி இவளை வென்றுளெனக் கூடற் புராணம்கூறும். ஈழநாடு அக்காலத்திலும் இசைமுதலிய கலைகளிலே தென்னிந்திய நாட்டிற்கு இணையாக விளங்கியதுதென்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். நிற்க,

ஒரு கதையைத் தாம் படிக்கும்போது, இல்லையேற் பிறர் சொல்லக் கேட்கும்போது, அக்கதை தம் முள்ளத்திற் புலப்படுவதைக்காட்டிலும், அக் கதைக்குரிய பாத்திரங்களாகச் சிலர் வேடம் பூண்டு நடித்தும் படித்தும், வசனித்தும் காட்டினுல் அக்கதை, எவருள்ளத்திலும் பசுமரத்தாணி போற் பதியுமல்லவா! இந்த உண்மையை உத்தேசித்தே, ஆன்றோர் சற்போதம் பயக்கும் சரித்திரங்களை நாடகமாக இயற்றித் தாம் நடித்தும், தாம் ஆசிரியராயிருந்து அந்நாடகங்களைத் தம் மாணுக்கருக்குப் பயிற்றி நடிப்பித்தும் வருவாராயினர். நாடகக்கலையானது, அவரவர் நாகரீகத்துக்கேற்ப எச்சாதியாரிடத்தும், எச்சமயத்தாரிடத்தும், எத்தேசத்தாரிடத்தும் உண்டெனலாம்.

இந்த ஈழநாட்டில் விளங்கிய எங்கள் மூதாதையர்களும், இயற்றமிழ் இசைத்தமிழ் போலவே நாடகக் கலையையும் காலந்தோறும் நன்கு விருத்தி செய்து வந்தனரென்பது ஈழநாட்டுச் சரித்திரவாயிலாகவும், ஐதிகத்தைக் கொண்டும் அறியக்கிடக்கின்றது. இந்நாட்டிலே நாடகம் நடித்தலாகிய கலைச்செயல், முற்காலத்தில் நன்கு கற்றவர்களாற் செய்யப்பெற்று வந்தது; இடைக்காலத்தில் அக்கலையை, கற்றவர்கள் கைநழுவவிட, பாமரர்களே அதனை ஏற்றுப் பயின்று நடித்துவந்தார்கள். அதனுல் நாடகக் கலைக்குள்ள மதிப்புச் சிறிது குன்றத்தலைப்பட்டது.

ஆனுல், இற்றைக்கு 45,50 வருடந் தொடக்கமாக நாடகக்கலையை நல்ல நிலையில் வைக்கவேணுமென்ற நோக்கம், தென்னிந்திய நாட்டிலும், இந்த ஈழநாட்டிலும் உள்ள அறிஞரிடத்திற் பிறந்தது. இதனுல் விளைந்த நன்மையைப் பின்னர் எடுத்துக்காட்டுதும்.

இனி, மற்றென்று விரிதலென்னும் குற்றத்தின் பாற்படாது, எடுத்த விஷயத்திற் புகுவோம். மாணுக்கருக்கு நாடகத்தை நன்கு பயிற்றி நடிக்கச்செய்யும் ஆசிரியரை, இந்நாட்டில் "**அண்ணுவி**" என்பர். இப்படியான அண்ணுவிமாருட்சிலர், தாமே நாடகங்களை இயற்றவும் நடிக்கவும், மாணுக்கருக்குப் பயிற்றவும் வல்லுநராய் விளங்கினர். அவர்கள் தாங்கள் அவ்வப்போது இயற்றிய நாடகங்களை ஏட்டில் எழுதியும், எழுதுவித்தும் பயிற்றி வந்தார்கள். அந்த ஏடுகளுட் பல காலகதியிற் சிதைந்தொழிய, சில சிதையாதிருந்தும் அச்சுவாகனம் ஏருதிருப்ப, சிலவினுஞ் சிலமாத்திரம் அச்சாகி வெளிவந்துள்ளன; அச்சானவைக்குள்ளும் சில இப்போது அருகிவிட்டன. சிலவினுஞ் சிலவே கிடைக்கத்தக்கன. ஆதலால் நாம் அறிந்த நாடகங்கள் சிலவற்றின் வரலாற்றையே இங்கே தொகுத்துத் தருகின்றேம்.

**1. மாணிக்கவாசகர் விலாசம்**: இது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுதுமலையிலே, மாப்பாண முதலியார் கோத்திரத்தில் வைரமுத்து உடையா

ரின் புதல்வராகிய இராமலிங்கம்பிள்ளை என்பரால் இயற்றப் பெற்றது. இவர் தமிழும் ஆங்கிலமும் கற்றுத் தேறியவரெனவும் புராண இதிகாசங்களை நன்கு பயின்று இனிமையான முறையிற் பொருள் சொல்ல வல்லுநர் எனவும், பலகீர்த்தனங்களையும் அந்தாதி முதலிய பிரபந்தங்களையும் இயற்றியுள்ளார் எனவும் சொல்வர். இவரை **ஆனைக்கோட்டை இராமலிங்கம்பிள்ளை** என்றும் சொல்வர். மாணிக்க வாசகர் விலாசம் சென்ற 1876 ம் ஆண்டு நாவாலி மு. அப்பாத்துரைப்பிள்ளையால் அச்சிடுவிக்கப் பெற்றுள்ளது. இவர் திருவாதவூரடிகள் புராணத்தையே பெரிதும் ஆதாரமாகக்கொண்டு, விலாச முறையிற் சொன்னயம், பொருணயம், செவிக்கின்பமமைய இன்னிசைக் கீர்த்தனங்களாலும், விருத்தங்களாலும் இந்நாடகநூலையாத்துள்ளனர். இந்நூலின் கண் இறைவராகிய கூலியாளர்வந்தியம்மை **கொடு**த்த பிட்டினை ஏற்றுண்டு அதன் ருசியைப் பாராட்டும் பொருளமைந்த விருத்தம் பொருட்செறிவும் இனிமையும் விரவியது. அது வருமாறு:

நஞ்சுடனிறைச்சியுண்டேன்,
நற் பெருந்துறையில் வெல்லக்
கஞ்சியுமுண்டேன், பிள்ளைக்கறியுண்டேன்,
கருதியே, மாம்
பிஞ்சுடன் கீரையுண்டேன், பேணி
நீர் தந்த பிட்டின்
விஞ்சிய ருசியொன்றிலில்லை, வேலை
யெவ்விடங் காட்டம்மே.

இக்காலத்திற் படக்காட்சியிற் காட்டப்படும் காம சிருங்கார வருணனைகளோடு கூடிய விபரீத நாடகங்களைப் நடிக்கும் பள்ளிக்கூட மாணவர்களுக்கு ஆசிரியர்களாயுள்ளவர்கள் இப்படியான நாடகங்களைப் பயிற்றி நடிக்கச்செய்வரேல், தமிழறிவும் சமய அறிவும் ஏறும். இவ்வாசிரியர் இயற்றிய இன்னொரு நாடகம்,

**2. நளச்சக்கரவர்த்தி விலாசமாகும்** : இவருடைய காலம் இற்றைக்கு 68 ஆண்டுகட்கு முந்தியதாம். இதன் அச்சுப்பிரதி இப்பொழுது கிடைக்கவில்லை.

**3. பதிவிரதை விலாசம்** : இது யாழ்ப்பாணத்து மல்லாகக் கீழ் நீதிஸ்தலத்தில் காரியதரிசியாகவும் துவிபாசகருமாகக் கடமையாற்றிய (தெல்லிப்பழை) குமாரகுலசிங்க முதலியாராற் பாடப்பெற்று, அவரது புதல்வர்களுள் ஒருவராகிய R. R. B குமார குலசிங்கம் என்பவரால் 1909 ம் ஆண்டு அச்சிடப் பெற்றது. இது இயற்றப்பட்டகாலம் 1859 ம் ஆண்டென நூன்முகத்திற் குறிக்கப்பட்டுள்ளது. இந்நாடகம் இருபாலாரும், எச்சமயத்தாரும், எச்சாதியாரும், படித்தும் நடித்தும் பயனடையக் கூடிய முறையில் இயற்றப் பெற்றுள்ளது. பதிவிரதை என்னும் ஓர் வணிககுல கன்னிகையே இக்கதைக்குத் தலைவியாவள். உடுப்பிட்டி—அ. சிவசம்புப்புலவர், வட்டுக்கோட்டை உவில்லியம் நெவிவின்ஸ் முதலிய அறிஞர்கள் இந்நாடகத்தைப் பாராட்டியுள்ளார்கள். இந்நாடகமும் இங்குள்ள கலாசாலை மாணவர்களாலும் மற்றையோராலும் நயந்து நடிக்கத்தக்கது.

**4. அபிமன்னன் சுந்தரி நாடகம்** : இது இற்றைக்கு —200 வருடங்களுக்குமுன், யாழ்ப்பாணத்திலிருந்த சண்முக ஐயர் என்பவராற் பாடத்தொடங்கி முற்றுப் பெறுதொழிய, அந்த ஐயாது சுற்றத்தவரும், திருவையாற்றில் எழுந்தருளிய வைரவப் பெருமான் அருளினாற் பாடுஞ் சக்தி பெற்றவரும், வண்ணை வைத்திலிங்கக் குறவஞ்சி, வட்டுக்கோட்டைப் பிட்டி வயற் பத்திரகாளியம்மை ஊஞ்சல், பருத்தித்துறை சித்திவிநாயகர் மேற்பாவிகற்கபப் பிரபந்தம் முதலியவற்றைப் பாடியவருமாகிய **கணபதி ஐயரால்** இயற்றப்பெற்றது. இவர் பாடிய ஏனைய நாடகங்கள் : **(5) மலையகந்தினி நாடகம் : (6) அலங்காரரூப நாடகம், (7) அதிரூபவதி நாடகம்** என்பனவாம். இவர் இயற்றிய பாடல்கள் எதும் கிடைத்திலது.

**8. மதன வல்லி விலாசம்** : இதனை இயற்றியவர் வடமராட்சியைச் சேர்ந்த உடுப்பிட்டியிலே வேளாள குலத்தவராகிய தாமோதரம்பிள்ளையின் புதல்வரும் இலக்கண இலக்கியம், கணிதசோதிட சாஸ்திரங்கள் கவிபாடும் திறமை முதலியவற்றிற் கைவந்தவரும், வீரபத்ரசதகம், நில அளவைச் சூத்திரம், சோதிட சுருக்கம் முதலிய நூல்களை இயற்றியவரும், தமதூரிலே ஒரு சைவ வித்தியாசாலையைத் தாபித்து அதனை அரசினர் நன்கொடைப்பணம் பெறுது தம் அந்திய காலம்வரை திறம்பட நடத்திவந்த புண்ணிய சீலரும், தனவந்தருமாகிய **சின்னத்தம்பி** என்பவராவர். இவரியற்றிய நாடகம் இப்பொழுது அகப்படவில்லை. இவர் 1878 ம் ஆண்டு மறைந்தனர்.

**9. சோமகேசரி நாடகம்** : இந்நாடகத்தை இயற்றியவர் யாழ்ப்பாணம் தென்மராட்சியைச் சேர்ந்த எழுதுமட்டுவாள் என்னும் கிராமத்திற் பிறந்தவரும் தமிழ் இலக்கண இலக்கியங்கள் சைவசித்தாந்த சாஸ்திரங்கள் வடமொழி ஆகமங்கள் என்னுமிவற்றைப் பயின்றவரும், ஆங்கில மொழி உணர்ந்தவரும், விரத நிச்சயம் ஆசௌசவிதி, திருச்செந்தூர்ப் புராண விரிவுரை என்னுமிவற்றை இயற்றியவரும், தென்மராட்சி மணியகாரனாக உத்தியோகம் பூண்டு பல ஆண்டு நடத்தி வந்தவருமாகிய **குலசேகரமாப்பாண முதலியாராவர்.** இவர் (10)

**பரிமளகாச நாடகம்** என்னும் இன்னொரு நாடகத்தையும் இயற்றியுள்ளார். இம் முதலியார் வண்ணார்பண்ணை வைத்திலிங்கச்செட்டியாரோடு நட்புப்பூண்டவரெனவும் சொல்லப்படுகிறது. 1827 ம் ஆண்டு இவர் தேகவியோகமானார் என்பர். இவர் இயற்றிய நாடகங்கள் அகப்பட்டில.

11. **குருசேத்திர நாடகம் :** இது வட இலங்கையிலுள்ள காரைநகரில் பிறந்த **கார்த்திகேச ஐயர் முருகேச ஐயர்** என்பவராற் பாடப்பெற்றது. இவர் காலம் இற்றைக்கு 125 ஆண்டுகளுக்கு முன்னதாகும். இந்நாடகநூல் இப்போது கிடைப்பதரிதாயிற்று.

12. **இரத்தினவல்லி நாடகம் :** இந்நாடகத்தைப் பாடியவர் யாழ்ப்பாணத்து நல்லூரிலே வாழ்ந்த **பரமானந்தப் புலவரின் புதல்வரும்,** கூழங்கைத் தம்பிரானிடம் தமிழிலக்கண இலக்கியம் முதலியவற்றைக் கற்றவரும், போத்துக்கேய பாஷை ஒல்லாந்த பாஷையும் ஆங்கிலம் என்னும் அந்நிய மொழிகளிற் பயின்றவரும், பதினெட்டு வருடகாலம் அரசினரிடம் ஆராய்ச்சி உத்தியோகம் பார்த்து வந்தவரும், மங்காப் புகழ்பெற்ற ஆறுமுகநாவலரின் தந்தையாருமாகிய **கந்தப்பிள்ளையாவார்.** இந்நாடகம் காசிகண்டத்திற் சொல்லப்பட்ட இரத்தினாவலியென்னும் கந்தருவமகள் சரித்திரத்தை ஆதாரமாகக்கொண்டு பாடப்பெற்றதென்பர். இவர்பாடிய மற்றொரு நாடகம் **(13) இராம விலாசமாகும்.** இவற்றைவிட இன்னும் பத்தொன்பது நாடகங்களை இவர் பாடியுள்ளார். இரத்தினவல்லி நாடகமே இப்புலவர் இயற்றிய இறுதி நாடகமென்றும், இந்நாடகத்தைப் பாடிக்கொண்டிருக்கும்போதே இவர் உயிர்நீத்தாரென்றும், இந்நாடகத்தில் எஞ்சிய பாகத்தை இவரது இளைய புதல்வராகியநாவலரவர்கள் பாடிப் பூர்த்திசெய்தாரென்றும், இப்புலவர் தமது வீட்டுமுற்றத்தில் நின்ற மாமரத்தின் காய்களை அணில் அரித்துக் கொட்டுவதைக்கண்டு அந்த அணில் இறங்கும்படி ஒருகவிபாட,அதுஉடனேநிலத்தில் வீழ்ந்திறந்த தென்றும் எமது தந்தை முதலிய காலம் கண்ட முதியோர் சொல்லக்கேட்டுள்ளோம். இப்புலவர் சென்ற 1842 ம் ஆண்டு ஆடி மாதத்தில் மறைந்தனர். இறக்கும்போது வயது எழுபத்தாறு.

14. **இந்திரகுமார நாடகம் :** இதனை இயற்றியவர் யாழ்ப்பாணத்து வடமராட்சியைச் சேர்ந்த வல்லுவெட்டி (வல்லுபட்டி) என்னும் ஊரிலே, வேளாண் மரபிலே, பிறந்த கதிர்காமபூபதி முதலியார் என்பவரது புதல்வரும், தமிழிலக்கண இலக்கியம் நன்கு பயின்றவரும், அருளம்பலக்கோவை, திருவிற் சுப்பிரமணியர் பதிகம், மூளாய் சித்திவிநாயகர், ஊஞ்சல், **நல்லைக்கலித்துறை, கந்தவனநாதரூஞ்சல்** முதலிய பிரபந்தங்களைப்பாடியவரும், ஊர்காவற்றுறையில் நீடித்தகாலம் நீதிபதியாயிருந்த (உவைமன்) கதிரவேற்பிள்ளையின் தந்தையாருமாகிய **குமாரசுவாமி முதலியாராவார்.** இதில் இந்திரகுமாரன் என்பது பஞ்சபாண்டவருள் ஒருவனாகிய அருச்சுனனைக்குறிக்கும்; அருச்சுனன் தீர்த்த யாத்திரை சென்றதும், சென்றவிடத்திலே கண்ணபிரான் தங்கையாகிய சுபத்திரைமேற் காதல் கொண்டதும், துறவி வேடம் பூண்டு அவளைக் கரவிற் கூடியதும், அதனையறிந்த பலராமன் முதலியோர் சீற்றங்கொண்டு பார்த்தனைப் பகைத்ததும், அது கண்டு கண்ணன் சமாதானஞ் சொல்லி எவ்வரையும் திருப்திப்படுத்திப் பாரோரறிய அருச்சுனனுக்கும் சுபத்திரைக்கும் முறைப்படி கலியாணம் செய்து வைத்ததுமாகிய வரலாற்றை இந்நாடகம் கூறும். இதில் யாக்கப்பட்டுள்ள பாக்களும் கீர்த்தனங்களும் மிகச் சிறந்தவை. இந்நாடகம் இப்புலவர் பாடிய தனிக்கீர்த்தனங்களையும் ஏனைய பிரபந்தங்களையும் ஒருங்கு சேர்த்து, இவரது புதல்வராகிய கதிரவேற்பிள்ளையவர்கள் அச்சிடுவித்துள்ளார். ஆயினும் அப்பிரதிகள் இப்பொழுது கிடைத்தல் அரிது. இந்த இந்திரகுமாரன் நாடகத்தையே யாழ்ப்பாணம் சரஸ்வதி விலாச சபையார் சில திருத்தங்கள் செய்து "**சுபத்திரை கல்யாணம்**" என்னும் பெயரிட்டுப் பலமுறை நடித்துப் புகழ்பெற்றனர். இவருடைய காலம் இற்றைக்கு 70 வருடங்களுக்கு மேற்பட்டதெனலாம்.

15. **அல்லி அரசி நாடகம் :** இதனை இயற்றியவர் வட்டுக்கோட்டையைத் தமது சந்ம ஊராகக்கொண்டவரும், கதிரமலைக் கந்தசுவாமி மீது பல கீர்த்தனங்கள் விருத்தங்கள் பாடியவருமாகிய **இராமசாமி ஐயராவர்.** இவருடைய காலம் இற்றைக்கு 150 வருடங்கட்கு முற்பட்டதாகும்.

16. **பூதத்தம்பி விலாசம் :** இது ஒல்லாந்தர் காலத்தில் நல்லூரிலே நடந்த வஞ்சனைக் கொலையைச் சிறிது விகற்பப்படுத்திக் கூறுவது. ஒல்லாந்த அரசினரின் கீழ் உயர்ந்த உத்தியோகம் பார்த்த பூதத்தம்பியினது மனைவியாகிய அளகவல்லிமீது, அந்திராசியென்னும் இன்னொரு உத்தியோகத்தன் காதல்கொண்ட விடத்து, கற்பிற் சிறந்த அளகவல்லி அவனது துர்நோக்கத்திற்கு உடன்பாடாதொழிய, அந்திராசி வஞ்சனையினால் பூதத்தம்பியை இராசதுரோகியென்னும் குற்றம் சுமத்திக் கொல்லுவித்ததும், அதனால் அளகவல்லி தற்கொலை செய்ததும், ஈற்றில் அந்திராசி அவமிருத்து அடைந்ததும் ஆகிய இவற்றைக் கூறுவது. இந்நாடகத்தை ஆதியிற் பாடியவர் யார் என்பது புலப்படவில்லை. இற்றைக்கு 50 ஆண்டுகட்கு முன்

தென் இந்தியாவிலிருந்து வந்து, வண்ணார்பண்ணையிலும் பருத்தித்துறையிலும் பல நாடகங்களைத் திறம்பட நடித்த, வண்ணை இந்து விநோதசபையார். இப்பூததம்பி விலாசத்தையும் இங்குள்ளார் கேள்விப்படி நடிக்க விரும்பி, தங்கள் நாடக ஆசிரியராகிய **சாமி சங்கரதாஸ்** என்பவரைக்கொண்டு பல கீர்த்தனங்கள், விருத்தங்களைப் பாடுவித்துச் சேர்த்து நடித்தனர். அவைகளையும் சேர்த்துத் திருத்தி அச்சிடப்பெற்ற மூன்றாம் பதிப்புப் பிரதியே இப்பொழுது கிடைக்கத்தக்கது.

(தொடரும்)

## இலங்கையைக் குடியரசு.................

(14 ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் இந்தப் பிரேரணையில் அங்கத்தவர்களின் தொகை குறிப்பிடப்படவில்லை.

"இப்பிரேரணை சனப்பிரதிநிதிகள் சபையிலு செனட் சபையிலும் நிறைவேற்றப்பட்டபின், இ விஷயமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய ஆரம்ப நடவடிக்கைகள் பற்றி எதிர்க்கட்சி அங்கத்தவர்களோடு நான் கலந்தாலோசிப்டேன். அரசாங்கக் கட்சியிலிருந்தும் எதிர்க்கட்சியிலிருந்தும் நியமனஞ் செய்யப்பட வேண்டிய அங்கத்தவர்களின் எண்ணிக்கைபற்றி அத்தருணத்தில் பேசிக்கொள்ளலாம்.

"தற்போதைய அரசியல் சட்டத்தின் பல அம்சங்கள் திருத்தப்பட வேண்டியிருக்கின்றன. எனவே இக்கொமிட்டி இவற்றை நுணுக்கமாக ஆராயும். அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கத் தற்போதையஅரசியல் சட்டத்தில் வசதிகள் அடியோடு கிடையாது. சமஷ்டி அரசாங்கம் பற்றியபிரச்சினையும் இக்கொமிட்டியால் பரிசீலனை செய்யப்படும்".

**மினிப்பே அபிவிருத்தித் திட்டத்தைத் திறந்து வைப்பதற்காக பிரதமர் சென்றபொழுது கண்டியில் எழுப்பப்பட்ட புதிய செக்கிரட்டேரியட் கட்டடத்தையும் திறந்துவைத்தார்.**



...மனுய்வு

## மொழிப்பயிற்சி

(ஆறும் புத்தகம் 7 ஆம் 8 ஆம் வகுப்புகளுக்கு)

**ஆசிரியர்கள் :**

பண்டித வ. நடராஜன், சு. வேலுப்பிள்ளை,
பதிப்பகம் : சுன்னுகம், வட - இலங்கைத் தமிழ் நூற்பதிப்பகம்.
விலை : ரூபா 1.75.

மொழிப் பயிற்சி நூல்கள் இக்காலத்தில் இலங்கையிலும், இந்தியாவிலும் மலிந்துகிடக்கின்றன. எனவே இந்த மொழிப் பயிற்சி நூல் அவசியமா என்ற ஆசங்கை எழுவது இயல்புதான். இத்தகைய குற்றம் தங்கள் மீதும் சாட்டப்படும் என்பதை நினைவிலிருத்தி மாணவருக்குக் கிளிப்பிள்ளைப் பாடம் போல இலக்கணத்தைப் பழைய உதாரணங்களுடன் மட்டும் போதிப்பது இலக்கணவறிவையூட்டுவதற்குச் சிறந்த வழியன்று என்பதை மறவாது இவ்வாசிரியர்கள் இந்த மொழிப்பயிற்சியை ஆக்கித் தந்திருக்கின்றனர்.

"மொழியறிவு சம்பந்தமாக இதுகாறும் வெளிவந்த நூல்களைப் போன்றதன்று இந்நூல். இது புதிய தொரு முறையில் இலக்கண விடயங்களைத் தெரிவிக்கிறது. மாணவர்களது இளம் உள்ளங்களில் தோன்றும் எண்ணங்களைப் பிழையற உணர்த்துதற்கு வேண்டிய அளவு இலக்கணத்தை அவர்களது மனங்கொளற் கேற்றவகையிலே தர்க்கரீதியாக மனத்தைக் கவரத்தக்க ஆரம்ப உரையுடன் வசனம், தொடர், சொல், பதம், புணர்ச்சி என்னும் முறையில் உணர்த்திச் செல்கிறது. ஆசிரியர்களின் அற்ப உதவியுடன், மாணவர் இந்நூலிற் கூறப்பட்டுள்ள பொருள்களை விளங்கிக்கொள்ள முடியும்."

இந்நூலகத்துள்ள மூன்று பகுதிகளில் முதற் பகுதியில் இலக்கண விடயங்களும், இரண்டாம்பகுதியில் கட்டுரைகளும் விளக்கங்களும் மூன்றும் பகுதியில் பயிற்சிகளும் இடம்பெற்றிருக்கின்றன.

இந்நூல் கல்லூரிகளிலும் பாடசாலைகளிலும் பயிலும் 7 ஆம் 8 ஆம் வகுப்பு மாணவர்க்கு ஏற்றதாக இயற்றப்பட்டது. எனினும் வ. மா. ஆ. சங்கத்தினர் நடாத்தும் க. பா. த. ப. பரீட்சைக்கு ஆயத்தஞ் செய்யும் மாணவர்க்கு உற்ற நண்பனுக உதவிபுரியும் வகையிலும் அமைந்துள்ளது. மேலும் அரசாங்க சேவையிலும் கம்பெனிகளிலும் இலிகிதர்களாகக் கடமையாற்றுவோர் இலக்கணப் பிழையின்றி எழுதுவதற்கும் துணைபுரியும்.

இலக்கியத்தின் மூலம் இலக்கணத்தை மாணவர் உளங் கொள்ளத்தக்கவாறு போதிப்பதிற் சிறந்த அனுபவமுள்ள பண்டித வ. நடராஜன் அவர்களும்

அவ...
இந்... புதிய...
கண்டுள்ளனர் எல...
றியும் சிறந்த ...
பெற்ற சுன்னுகம் வ...
பகம் இந்த நூலை வெ...
ஒரு தனிச் சிறப்பு இருக்கும். மு...
தம் புதிய அச்செழுத்துக்கள் இந்நூ...
தற்கு ஏதுவாயிருப்பது இந்தப் பதிப்பகமே...

**பண்ணுகம் வடக்கு இந்து இளைஞர் இயக்கம்**
**6 வது ஆண்டு விழா**

மேற்படி விழா நிகழும் ஏவிளம்பி வருடம் புரட்டாதித் திங்கள் 13 ம் நாள் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 6.30 மணியளவில் திரு. த. குமாரசாமி அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. அவ்விழாவில் வித்துவான் வி. நவரத்தினம் அவர்கள் "பக்தியும் சிவமும்" என்னும் விடயம் பற்றிச் சொற்பொழிவாற்றினர்.

ஆசிரியை பத்மா பஞ்சநதேஸ்வரன் அவர்கள் "மலருஞ் சமுதாயத்தில் மகளிர் கடமை" என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினர். அத்துடன் செல்வன் சி. பெரியதம்பியும், வ. சுப்பிரமணியமும் செ. தங்கராசாவும் சொற்பொழிவாற்றினர்கள். ஈற்றில் நடனமும் திரு. வே. நாகலிங்கம் அவர்களின் சங்கீதக் கச்சேரியும் நடைபெற்றன.

## கல்விப்பகுதி அறிக்கை

(26ம் பக்கத் தொடர்ச்சி)

ஆராய்ந்து சிபார்சு செய்யும் பொருட்டு கௌரவ கல்வி அமைச்சர் அவர்கள் பின்வருவோரைக்கொண்ட ஓர் விசாரணைச் சபையை நியமனஞ் செய்துள்ளார் —

டாக்டர் ஹெக்டர் ஏ. பஸ்ஸே ஆங்கிலப் பேராசிரியர், இலங்கைச் சர்வகலாசாலை.

திருமதி. ஏ. ஈ. எம். கெடெஸ், விரிவுரையாளர் அரசாங்க பயிற்சிக் கல்லூரி, மஹரகமை.

திரு. எஸ். ஏ. விஜெயதிலக்க, அதிபர், ஆனந்தாக் கல்லூரி.

திரு. எம். டி. குணவர்த்தன, அதிபர், தேர்ஸ்டன் கல்லூரி.

செல்வி சித்ரா விக்ரமசூரியா, கல்விக் கலாபீடம் இலங்கைச் சர்வகலாசாலை.

திரு. எஸ். எவ். டீ. சில்வா, கல்வி அதிபர் —தலைவராகக் கடமையாற்றுவார்.

திரு. ஈ. ரேுத, கல்வி அதிகாரி—(காரியதரிசியாகக் கடமையாற்றுவார்)

(இந்தப் பெயர் அட்டவணை ஒவ்வொரு அங்கத்தவரதும் விருப்பத்தையறிந்தபின் மாற்றப்படவுங்கூடும்.)

## ...ங்க ... சுர நிலையத்தில்
## ...பெறக்கூடிய நூல்கள்

| | | விலை ரூ. ச. | | தபாற் செலவு சதம் |
|---|---|---|---|---|
| 1. | இலங்கைக் கல்வி முறைச் சீர்திருத்தம் சம்பந்தமாய ஆலோசனைகள் .. .. .. | 55 | .. | 10 |
| 2. | அரசாங்க பாஷைக் கொமிஷனின் நான்காவது இடையறிக்கை .. | 50 | .. | 15 |
| 3. | அரசாங்க பாஷைக் கொமிஷனின் ஐந்தாவது இடையறிக்கை .. | 1.20 | .. | 35 |
| 4. | இந்து ஆலயங்களும் தரும நம்பிக்கைச் சொத்துகளும் .. | 70 | .. | 15 |
| 5. | இந்து மத அறநிலையங்கள், ஆதீனங்கள் முதலியவை பற்றிய விசேஷ விசாரணைச் சபையின் அறிக்கை 1951 ம் ஆண்டு ஜூன் மாதம் .. .. .. | 2.00 | .. | 35 |
| 6. | இலங்கைக் குடிமதிப்பு—1946 .. .. .. | 5.00 | .. | 35 |
| 7. | 6 ம், 7 ம், 8 ம் வகுப்புகளில் கல்வியூட்டும் மொழிகளாக தேசிய மொழிகளை இலகுவில் அமைத்துக்கொள்வதற்கான சிபார்சுகளைச் செய்தற்கு நியமிக்கப்பட்ட சபையின் அறிக்கை .. | 1.45 | .. | 35 |
| 8. | இலங்கை அரசியற் சீர்திருத்த விசாரணைச் சபையின் அறிக்கை—194[illegible] ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் .. .. | 2.00 | .. | 35 |
| 9. | சுகாதார சேவைகளின் பதில் அதிபரது 1953 ம் வருட நிர்வாக அறிக்கை .. .. .. .. | 1.55 | .. | 35 |
| 10. | குடிமதிப்பு புள்ளிவிபர தற்காலிக அதிபரினது 1953 ம் வருட நிர்வாக அறிக்கை .. .. .. | 60 | .. | 20 |
| 11. | இலங்கைப் பறவைகள்—சித்திரசகித நூல் .. .. | 5.00 | .. | 35 |

அரசாங்க பிரசுர நிலைய அதிபர்,
தபால் பெட்டி நிர். 500,
கொழும்பு 1.

என்ற விலாசத்தில் நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகவற்பகுதியினருக்காக, இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.